# சூனியம் மற்றும் சோதிடம் குறித்த இஸ்லாமிய சட்ட விளக்கம்

*அஷ்ஷெய்க்*

*அப்துல் அஸீஸ் இப்னு அப்தில்லாஹ் பின் பாஸ்*

(*ரஹிமஹுல்லாஹ்*)

شركاء التنفيذ:

دار الإسلام جمعية الربوة رواد الترجمة المحتوى الإسلامي



يتاح طباعة هذا الإصدار ونشره بأي وسيلة مع الالتزام بالإشارة إلى المصدر وعدم التغيير في النص.



Telephone: +966114454900

ceo@rabwah.sa

P.O.BOX: 29465

RIYADH: 11557

www.islamhouse.com

அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் திருப்பெயரால் ஆரம்பிக்கிறேன்.

# முன்னுரை

புகழனைத்தும் அழ்ழாஹ் ஒருவனுக்கே உரித்தாகட்டும். ஸலாத்தும், ஸலாமும் அல்லாஹ்வின் தூதர் மீதும் அவர்களின் குடும்பத்தார் மீதும், அவர்களின் தோழர்கள் மீதும், அவர்களின் வழிகாட்டள்களைப் பின்பற்றியோர் மீதும் உண்டாவதாக.

சூனியம் பெரும் பாவங்களில் ஒன்றாகும், அல்லாஹ்வும் அவனின் தூதரும் விலகி நடக்க வேண்டும் என்று கட்டளைப்பிரப்பித்த ஏழு பாவங்களில் ஒன்றாகவும் உள்ளது. இக்காலத்தில் சூனியம் என்பது பல்வேறுபட்ட வடிவங்களிலும் முறைகளிலும் மக்கள் மத்தியில் பரவிக் காணப்படுகிறது. சில சமயம் இவை உணர்ச்சியைத்தூண்டும் திரைப்படங்களின் மூலம் பொழுதுபோக்கு மற்றும் கோமாளித்தனம் என்ற பெயரிலும், சில சமயம் துறவறம் மற்றும் கராமத் (வழமைக்கு மாறாக நடக்கும் அதிசய நிகழ்வுகள்) என்ற அடிப்படையிலும், சில சமயங்களில் சட்டப்பூர்வமான 'ருக்யா ' ஓதிப்பார்த்தல் என்ற போர்வையிலும் இது காணப்படுகிறது. சில நேரம் அது நாட்டு மருத்துவம், மூலிகை மருத்துவம், மற்றும் இது போன்ற வேறு வேறு வடிவங்களிலெல்லாம் வெளிக்கொண்டுவரப்படுகிறது. இது பற்றி பாமரர்களும்; மார்க்கத்தில் தெளிவற்றோரும் அறியாது உள்ளனர்.

சஊதி அரேபியாவின் முப்தியும் மூதறிஞர் மன்றம் மற்றும் பத்வாவுக்கும் (மார்க்க தீர்ப்பு) அறிவியல் ஆய்வுக்குமான அமைப்பின் தலைவருமான அஷ்ஷேய்ஹ் அப்துல் அஸீஸ் இப்னு அப்தில்லாஹ் இப்னி பாஸ் (ரஹ்மதுல்லாஹி அலைஹி) அவர்களின் நூலானது சூனியம் தொடர்பான மார்க்கத்தீர்ப்பு பற்றிய விபரம் மற்றும் அதிலிருந்து விலகி எச்சரிக்கையாக இருப்பது, (ஜோசியம்) குறி சொல்பவரிடத்தில் செல்வது பற்றிய சட்ட நிலை குறித்த விடயங்களை உள்ளடக்க்கியுள்ளது. மற்றும் அல்குர்ஆன், ஸுன்னாவிலிருந்து பெற்ற ஷரீஆ ஆதாரங்களை அடிப்படையாக்கொண்டு மிக இலகு நடையிலும் இது எழுதப்பட்டுள்ளது. இதனால்தான் இஸ்லாமிய விவகாரங்கள் அவ்காப், அழைப்பு மற்றும் வழிகாட்டல் அமைச்சானது இப்புத்தகத்தை அச்சிட்டு பிரசுரிக்க வேண்டுமெனக் கருதியது.

சூனியம் மற்றும் சூனியம் செய்வோர், குறிசொல்வோரிடத்தில் செல்வதன் சட்ட விளக்கம் என்ற ஷேய்க் அவர்களின் இந்நூலானது அவரின் சிறப்பான சேவைகளில் ஒன்றாகவும், மக்களை நன்மையின் பால் அழைத்து மார்க்கத்தில் தெளிவூட்டுதல், மார்க்க சட்டதிட்டங்களை தெளிவு படுத்துதல், தீமைகளை விட்டும் எச்சரிக்கை செய்தல், அதில் விளிப்புணர்வை ஏற்படுத்தல், முஸ்லிம்கள் அனைவருக்கும் நலன் நாடுதல் அவர்களை அல்குர்ஆனையும் நபியின் ஸுன்னாவையும் கடைப்பிடித்து ஒழுகுமாறும் முன்னோர்களான ஸலபுஸ்ஸாலிஹீன்களின் கொள்கையில் பயணிக்குமாறும் அழைப்பு விடுத்தல் மற்றும் இதைத்தவிரவுள்ள தீய சிந்தனைகள் கோட்பாடுகள் நம்பிக்கைகளை விட்டும் விலகி இருக்குமாறு எச்சரித்தல் என்ற அவரின் தொடரான பணிகளில் ஒன்றாகவும் இது கருதப்படுகிறது.

இக்கொள்கையின் அடிப்படையிலேயே இந்நாடும் ஙீரிய இத்தலைமையும் பயணித்துக்கொண்டிருக்கிறது. இதில் அல்லாஹ் அவர்களை உறுதிப்படுத்தி வைப்பானாக! மேலும் இதற்கான உதவியையும் நல்வாய்ப்பினையும் பலத்தினையும் வழங்குவானாக! மேலும் அல்லாஹ் இப்புத்தகத்தின் தொகுப்பாளரான பேறறிஞர் இப்னு பாஸ் (ரஹ்) அவர்களுக்கு சிறந்த நற்கூலியை வழங்கி அதிகமான பாக்கியத்தையும் வழங்குவானாக

இப்புத்தகத்தை வாசிப்பவரும், கேட்பவரும், கற்றுக்கொள்பவரும் இதன் மூலம் பயன்பெற வேண்டுமென அல்லாஹ்விடம் இறைஞ்சுவதுடன் எங்கள் அனைவருக்கும் அல்குர்ஆனையும் ஸுன்னாவையும் பின்பற்றி வாழவும் ஷைத்தானின் ஊசலாட்டங்கள் பிழையான முறைகள் அனைத்தையும் எம்மை பாதுகாக்குமாறும் அவனிடம் பிரார்த்திக்கிறோம். அவனே இதற்கு உதவிசெய்பவனாகவும் வல்லமை படைத்தவனாகவும், நேரான பாதைக்கு வழிகாட்டுபவனாகவும் உள்ளான். மேலும் எங்கள் நபி முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் மீதும் அவர்களின் குடுபத்தார் மற்றும் அவர்களின் தோழர்கள் அனைவர் மீதும் ஸலாத்தும் ஸலாமும் உண்டாவாதாக

**அப்துல்லாஹ் இப்னு அப்தில் முஹ்ஸின் அத்துர்கி**

இஸ்லாமிய விவகாரங்கள், அவ்காப், அழைப்பு மற்றும் வழிகாட்டல் அமைச்சர்

## சூனியம், சோதிடம் மற்றும் அவை தொடர்பான சட்டம்

எல்லாப் புகழும் அல்லாஹ் ஒருவனுக்கே சொந்தம். ஸலாத்தும் ஸலாமும் இறுதி நபி (ஸல்)அவர்களின் மீது உண்டாவதாக

இன்றைய காலத்தில் மருத்துவம் செய்வதாகக் கூறிக் கொண்டு சூனியம், சோதிடம் ஆகியவற்றின் மூலம் சிகிச்சை செய்யக் கூடிய மந்திரவாதிகள் அதிகரித்துவிட்டனர். அறியாமைக்கு ஆளாகியுள்ள அப்பாவி மக்களை தமக்கு சாதமாக பயன்படுத்தி இவர்கள் ஏமாற்றுகின்றனர்! இந்நிலையைக் கருத்தில் கொண்டு, அல்லாஹ்வுக்கும் அவனுடைய அடியார்களுக்கும் நலன் நாடுதல் என்ற அடிப்படையில் –இந்த விடயத்தில் இஸ்லாத்திற்கும் முஸ்லிம்களுக்கும் பேராபத்து உள்ளதென்பதைத் தெளிவு படுத்த விளைகிறேன். ஏனெனில், இம்மந்திரவாதிகளிடம் சிகிச்சை செய்வது என்ற பெயரில் சரணடைவது அல்லாஹ் அல்லாதவர்களுடன் தொடர்புகொள்கிற நிலை ஏற்படுவதோடு, மேலும் இந்நிலையானது அல்லாஹ்வுக்கும் – அவனின் தூதரின் கட்டளைகளுக்கும் முரணாக நடக்கும் நிலைக்கு ஆளாக்கி விடுகிறது!

அல்லாஹ்விடம் உதவி தேடியவனாக இது குறித்து பின் வரும் விடயங்களைக் குறிப்பிடுகிறேன். நோய்க்கு சிகிச்சை பெறுவது இஸ்லாத்தில் ஆகுமென்பதில் எவ்வித கருத்து வேறுபாடுமில்லை. எனவே ஒரு முஸ்லிமைப் பொருத்தவரை தனது நோயை இணங்கண்டு அந்நோய்க்குப் பொருத்தமான, ஷரீஆ அனுமதித்த சிகிச்சையைப் பெறுவதற்காக உட்புற நோய்களிலும் அறுவை சிகிச்சை, நரம்பியல் நோய்கள் போன்ற துறைகளில் திறமை பெற்ற மருத்துவரிடம் சென்று மருத்துவம் செய்தல் வேண்டும். ஏனெனில், இது வழமையான நடைமுறையிலுள்ள காரண காரியங்களுக்குட்பட்ட ஒரு விவகாரமாகும். இது ஒரு போதும் 'தவக்குளுக்கு' (இறைவனை முழுவதும் சார்ந்திருத்தல்) என்பதற்கு முரணானதல்ல. மேலும் அல்லாஹ் இவ்வுலகில் நோய்களை இறக்கிய அதே நேரம், அவற்றிற்கான மருந்தையும் சேர்த்தே இறக்கியுள்ளான். அல்லாஹ்வின் ஆணையின் படி- இதனை அறிந்தோர் அறிந்துள்ளனர், அறியாதோர் அறியாது உள்ளனர்; என்றாலும் அல்லாஹ்,தனது அடியார்களுக்கு ஹராமாக்கி விலக்கியவற்றில் எந்த நிவாரணத்தையும் ஏற்படுத்தவில்லை

எனவே ஒரு நோயாளி; மறைவானவற்றைஅறிந்து வைத்திருப்பதாக வாதிடக்கூடிய சோதிடர்களிடம் (குறிசொல்பவர்களிடம்) தங்களது நோய்களைத் தெரிந்து கொள்ளவதற்கு செல்வது கூடாது. மேலும் அவர்கள் கூறும் விடயங்களை உண்மையென ஏற்றுக் கொள்வதும் கூடாது!; ஏனெனில் அவர்கள் ஊகத்தின் அடிப்படையில் அல்லது தங்களின் நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்ள ஜின்களின் உதவியை நாடி இவ்வாறான விடயங்களை கூறுகின்றனர். இதன் மூலம் தங்களுக்கு 'இல்முல் ஃகைப்' எனும் மறைவான விடயங்களை அறிந்து கொள்வதற்கான ஆற்றல் இருப்பதாக வாதிடுவார்களாயின் இவர்கள் குஃப்ரிலும் (இறை நிராகரிப்பிலும்) வழிகேட்டிலும் உள்ளனர் என்பதே இவர்கள் குறித்த இஸ்லாமிய தீர்ப்பாகும். இமாம் முஸ்லிம் அவர்கள் தனது ஸஹீஹில் நபியவர்கள் கூறிய பின்வரும் ஹதீஸை பதிவு செய்துள்ளார்கள் : ; யார் (சோதிடன்) குறி சொல்பவனிடம் சென்று ஏதேனும் ஒன்றைப் பற்றி விசாரித்தால் அவனுடைய நாற்பது நாட்களின் தொழுகைகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. நபியவர்கள் கூறியதாக அபூ ஹுரைரா ரலி அவர்கள் அறிவிக்கிறார்கள் : ((எவர் சோதிடனிடம் சென்று அவன் சொல்வதை உண்மைப்படுத்துகிறாரோ, அவர் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் மீது இறக்கியருளப்பட்டதை நிராகரித்தவராவார்.)) இந்த ஹதீஸானது அபூதாவூத் உற்பட ஏனைய நான்கு ஸுனன்களிலும் பதிவூசெய்யப்பட்டுள்ளது. இமாம் ஹாகிம் அவர்கள் பின்வரும் வாசகத்தை பதிவு செய்து விட்டு ஸஹீஹான ஹதீஸ் எனத் தீர்ப்பளித்துள்ளார். நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் கூறினார்கள் ( யார் ஒருவர் குறி சொல்பவரிடமோ அல்லது சோதிடனிடமோ சென்று அவர் கூறுவதை நம்பி உண்மைப்படுத்தினால், முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் மீது இறக்கியருளப்பட்டதை நிராகரித்தவராவார்.) இம்ரான் இப்னு ஹுஸைன் ரழி அவர்கள் அறிவிக்கிறார்கள். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள் : சகுனம் பார்ப்பவரும் தனக்கு பார்க்குமாறு சொல்பரும், சோதிடம் (சாஸ்திரம்) பார்ப்பவரும் பார்த்து விடுமாறு சொல்பரும் சூனியம் செய்பவரும் சூனியம் செய்யுமாறு வேண்டுபவரும் எங்களைச் சார்ந்தரல்ல. மேலும் யார் ஒருவர் சோதிடனிடம் சென்று அவர் கூறுவதை நம்பி உண்மைப்படுத்துகிறாரோ அவர் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் மீது இறக்கியருளப்பட்டதை நிராகரித்தவராவார். இந்த ஹதீஸை பஸ்ஸார் அவர்கள்

சிறந்த அறிவிப்பாளர் தொடரின் மூலம் பதிவு செய்துள்ளார் மேலே குறிப்பிடப்பட்ட ஹதீஸ்கள் அனைத்திலும் குறி சொல்பவர்கள், சோதிடம்(சாஸ்திரம்) பார்ப்பவர்கள், சூனியக்காரர்கள் மற்றும் இது போன்றவர்களிடம் செல்வதும் அவர்களிடம் விளக்கம் கேட்பதும் அவர்கள் கூறுவதை நம்புவதும் கூடாது என்ற தடையும் எச்சரிக்கையும் காணப்படுகிறது! எனவே ஆட்சியாளர்கள், (அதிகாரம் படைத்தவர்கள்) 'அஹ்லுல் ஹிஸ்பா எனும் அரசினால் அங்கீகாரம் அளிக்கபட்டு நன்மையை ஏவித் தீமையை தடுக்கும் பணியில் ஈடுபவோர், மற்றும் ஏனைய பொறுப்பாளர்களின் கடமையாதெனில், குறி சொல்பவர்களிடமோ சோதிடர்களிடத்திலோ மக்கள் செல்வதை நிராகரிக்க வேண்டும்.,மேலும் இத்தகைய தொழிலில் ஈடுபடுவோர் கடைவீதிகளுக்கு வராமல் தடுத்து நிறுத்த வேண்டும். சில விடயங்களில் இம்மந்திரவாதிகள் கூறுவது உண்மை என்பதை வைத்துக்கொண்டும், அவர்களிடம் வரும் பெருந்தொகையானோரை வைத்தும் ஏமாந்து விடக்கூடாது. காரணம் இவர்களிடம் செல்வோர் மார்க்கம் பற்றிய அறியாமையில் உள்ளவர்களாவர். இறைத்தூதர்(ஸல்) அவர்கள், அந்த மந்திரவாதிகளிடம் சென்று வருவதையும், அவர்களிடம் கேட்பதையும், அவர்கள் கூறுவதை நம்புவதையும் தடைசெய்துள்ளார்கள் என்பது இதற்கான அடிப்படையாக உள்ளது. இது மட்டுமல்லாது இவர்கள் மிகப் பெரும் பொய்யர்கள் என்பதினால் இதன் விளைவக மிகப் பெரும் தீமையும், பெரும் ஆபத்தும், பயங்கரமான பின் விளைவுகளும் உண்டாகும். அதே போன்று சோதிடர்களும் மந்திரவாதிகளும் தாம் மறைவான விடயங்களை அறிந்துள்ளதாக வாதிடுவதானது (குப்ர்) இறைநிராகரிப்பு என்பதற்கு மேற்குறிப்பிட்ட நபிமொழிகள் தெளிவான ஆதாரங்களாகும். மேலும் இவர்கள் தங்களின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக அல்லாஹ்வை அன்றி ஜின்களின் உதவியை பெருவதுடன் அவர்களுக்கு அடிபணிந்து வணங்குகின்றனர்; இவ்வாறு செய்வது (ஷிர்க்) இணைவைப்பும் (குஃப்ர்)- நிராகரிப்பும் ஆகும். மறைவான விடயங்களை அறிவதாக வாதிடக் கூடிய இவர்களை,உண்மைபடுத்துவோரும் இவர்களைப் போன்று நிராகரிப்பாளர்களே ஆவர். மேலும் இந்த மந்திரவாதிகளிடம் சென்று எவர் மந்திரத்தையும் சோதிடத்தையும் கற்கிறார்களோ அவர்களை விட்டும் அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் நீங்கிவிட்டார்கள். இந்த மந்திரவாதிகள் கூறும் சிகிச்சை முறைகளான

தாயத்துக்களில் (தகடுளில்) மந்திரித்தல்; மந்திரித்துக் கோடுகள் வரைவது போன்றவற்றிலும் இவை போன்ற மூட நம்பிக்கைகளில் ஒரு முஸ்லிம் இவர்களை பின்பற்றுவது, அனுமதிக்கப்படாத தடைசெய்யப்பட்ட விடயமாகும். ஏனெனில் இவை எல்லாம் சோதிடம் பார்ப்பது போன்ற மக்களைக் குழப்பத்திலாழ்த்தும் செயல்களாகும். யார்; இவற்றில் திருப்தி காணுகிறார்களோ அவர்கள் யாவரும் இந்த மந்திரவாதிகளின் வழிகேட்டிற்கும், இறை நிராகரிப்புக்கும் துணை போனவர்களாகவே கருதப்படுவர். மேலும் முஸ்லிம்களில் எவரும் அவர்களிடம் சென்று தனது மகன் அல்லது உறவினரை யார் திருமணம் செய்துகொள்வார்கள்? அல்லது வாழ்க்கைத் துணைவர்களுக்கும் அவர்களது குடும்பத்தினருக்கும் மத்தியில் அன்பும், நட்பும் ஏற்படுமா, அல்லது பகைமையும் பிரிவினையும் உண்டாகுமா? என்று கேட்பதும் கூடாது,

ஏனெனில் இது அல்லாஹ் மாத்திரம் அறிந்து வைத்திருக்கும் மறைவான விடயங்களாகும்.

சூனியம் (குஃப்ர்) இறை நிராகரிப்பை ஏற்படுத்தும் தடை செய்யப்பட்ட காரியங்களில் உள்ளவையாகும். இது குறித்து ஸூறத்துல் பகராவில் ஹாரூத், மாரூத் எனும் இருமலக்குகள் விடயத்தில் அல்லாஹ் பின்வருமாறு குறிப்பிடுகிறான். மேலும், அவ்விருவரும் "நாங்கள் சோதனையாக இருக்கிறோம், ஆதலால் இதைக் கற்று நீ காஃபிராகி விட வேண்டாம்" என்று கூறும்வரை, அவர்கள் (அதனை) ஒருவருக்கும் கற்றுக் கொடுப்பதில்லை, ஆகவே, கணவனுக்கும், மனைவிக்குமிடையில் எதைக்கொண்டு பிரிப்பார்களோ, அதை அவ்விருவரிடமிருந்து கற்றுக் கொள்வார்கள்; மேலும் அல்லாஹ்வின் கட்டளையின்றி அதைக்கொண்டு அவர்கள் ஒருவருக்குமே தீங்கிழைக்கக் கூடியவர்களாக இல்லை. அன்றியும், அவர்களுக்கு இடரளிப்பதும், அவர்களுக்கு பயனளிக்காததுமானதை அவர்கள் கற்றுக் கொள்கிறார்கள். இன்னும், அ(ச்சூனியத்)தை எவர் விலைக்கு வாங்கிக் கொண்டாரோ அவருக்கு மறுமையில் எந்த பாக்கியமுமில்லை என்பதைத் திட்டமாக அவர்கள் அறிந்திருக்கின்றனர். மேலும், அவர்கள் அறிந்து கொள்ளக்கூடியவர்களானால் எதற்குப்பகரமாக தங்களையே அவர்கள் விற்று விட்டார்களோ அது மிகக் கெட்டது. (2)

இத்திருமறை வசனமானது, சூனியம் (குஃப்ர்) இறைநிராகரிப்பாகும் என்பதையும், சூனியம் செய்பவர்கள், கணவன் – மனைவிக்கிடையே பிரிவினையை உண்டு பண்ணுகிறார்கள் என்பதையும் தெளிவு படுத்துவதோடு, சூனியம் என்பது அதுவாக எவ்வித நன்மையோ தீங்கையோ ஏற்படுத்தக்கூடியதல்ல எனவும் குறிப்பிடுகிறது. அல்லாஹ்வின் நாட்டத்தைக் கொண்டு பிரபஞ்ரீதியான இறைநியதியின் அடிப்படையிலேயே தாக்கத்தை ஏற்படுத்திட முடியும், ஏனெனில் அல்லாஹ்வே நன்மை தீமைகளைப் படைத்தவன். மேலும் சிலை வணங்கிகளான இணைவைப்பாளர்களிடம் இவற்றை கற்றுக்கொண்டு கற்பனையாக இட்டுக் கட்டி பொய்கூறும் இம் மந்திரவாதிகளின் தீமைகள் பெருகி, அபாயங்களும் ள் அதிகரித்துவிட்டன. இவர்கள், இம்மந்திரங்களை இணைவைப்பாளர்களிடம் கற்றுக்கொண்டு வந்து, அறிவு நிலையில் பலவீனமாக உள்ள மக்களைக் குழப்பத்தில் ஆழ்த்திவிட்டார்கள். இன்னா லில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிஊன், ஹஸ்புனல்லாஹு வ நிஃமல் வகீல் (நிச்சயமாக நாம் அனைவரும் அல்லாஹ்வுக்கே உரியவர்கள். நிச்சயமாக நாம் அவன் பக்கமே திரும்பிச் செல்பவர்களாய் இருக்கிறோம். அல்லாஹ்வே நமக்குப் போதுமானவன் பொறுப்பேற்பவர்களில் அவன் மிகச் சிறந்தவன்) மேலும் இந்த வசனம் சூனியத்தைக் கற்றுக் கொள்பவர்கள், தங்களுக்கு எவ்விதப்பயனும் அளிக்காத, மாறாக, தீங்கு அளிக்கக் கூடியதையே கற்றுக் கொள்கிறார்கள். அல்லாஹ்விடத்தில் அவர்களுக்கு எவ்வித விமோசனமும் கிடையாது என்பதை சுட்டிக் காட்டுவதுடன் இம்மையிலும் மறுமையிலும் மிகப்பெரும் நஷ்டத்திற்கு ஆளாவார்கள் என்ற கடும் எச்சரிக்கையும் இருப்பதாக குறிப்பிடுகிறது. காரணம் யாதெனில் இத்தகையோர் தமது முயற்சிகளை அற்ப கிரயத்திற்காக விற்று விட்டார்கள். இதனால் அல்லாஹ் இந்த வசனத்தில் அவர்களை பலித்துக்கூறியுள்ளான். (அவர்கள் அறிபவர்களாக இருந்தால் எதற்காக தம்மை விற்றார்களோ அது மிகவும் கெட்டதாகும்) (3) இவ்வசனத்தில் "அஷ்ஷிராஉ" என்ற சொல் "அல் பய்உ" என்ற விற்றல் (கொடுக்கள் வாங்களில் ஈடுபடல்) என்ற கருத்தை குறிக்கிறது

இந்த மந்திரவாதிகள் (சூனியக்காரர்கள்) மற்றும் ஜோதிடர்களின் கெடுதியை விட்டும், மற்றும் பித்தளாட்டங்களை செய்து மக்களை வசியம்

செய்வோரின் கெடுதியை விட்டும் அல்லாஹ்விடம் ஈடேற்றத்தையும் பாதுகாப்பையும் வேண்டுகிறோம். மேலும் முஸ்லிம் ஆட்சியாளர்களுக்கு இந்த சூனியக்காரர்களின் விடயத்தில் எச்சரிக்கையாக இருப்பதற்கும் அவர்களின் மீது அல்லாஹ்வின் கட்டளையைச் செயல்படுத்துவதற்கும் அல்லாஹ் நல்லருள்பாலிக்க வேண்டும் எனவும் பிரார்திக்கின்றோம். இவ்வாறு அல்லாஹ்வின் கட்டளையை அவர்களின் மீது நடைமுறைப்படுத்தும் போதே இந்த மந்திரவாதிகளின் கெடுதி மற்றும் அவர்களுடைய தீய செயல்களை விட்டும் மக்கள் நிம்மதி பெற முடியும். நிச்சயமாக அல்லாஹ் பெரும் கொடையாளனும் கண்ணியமிக்கவனுமாவான்

அல்லாஹ் தனது அடியார்கள் மீது புரிந்த அருளினாலும் பேருபகரத்தினாலும் அவனுடைய அருளை முழுமைப்படித்திட வேண்டுமென்பதற்காகவும் -சூனியம் செய்யப்படும் முன்பாக அதன் தீங்கிலிருந்து தற்காப்புப் பெறக்கூடிய வழிகாட்டல்களை அல்லாஹ் தன் ஷரீஅத்தில் விதித்துள்ளான். மேலும் சூனியம் செய்யப்பட்ட பின்பு எதன் மூலம் சிகிச்சை பெற முடியுமோ அவற்றையும் அவர்களுக்குத் தெளிவுபடுத்தியுள்ளான்

சூனியம் செய்யப்படும் முன்னர் அதன் ஆபத்திலிருந்து பாதுகாப்புப் பெறவும் சூனியம் செய்யப்பட்ட பின்னர் சிகிச்சை செய்யவும ஷரீஅத்தின் அனுமதியளிக்கப்பட்ட திக்ர் மற்றும் துஆக்கள் பற்றிய விபரம் கீழே தரப்படுகிறது. இவற்றை ஓதீ நிவாரணம் பெற முடியும்

சூனியம் செய்யப்படுவதற்கு முன்னர் அதன் ஆபத்திலிருந்து பாதுகாப்பு பெறுவதற்கு மிக முக்கியமானதும் பயன்மிக்கதுமான விடயம் என்னவெனில், அல் குர்ஆன் – அல் ஹதீஸில் வந்தள்ள திக்ர்கள், பாதுகாப்புத்தேடும் துஆக்கள் ஆகியவற்றின் மூலம் பாதுகாப்புத் தேடுவதாகும். இவற்றில் கடமையான ஒவ்வொரு தொழுகைக்குப் பிறகு ஸலாம் கொடுத்தவுடன் ஓதும் திக்ர்களுடனும், தூங்கும் போதும் ஆயதுல் குர்ஸியை ஓதுவது முக்கியமானதாகும். ஏனெனில் ஆயதுல் குர்ஸி யானது அல் குர்ஆனின் மிக மகத்தான வசனமாகும். 'அல்லாஹு லாஇலாஹ இல்லா ஹுவல் ஹய்யுல் கய்யூம் லா தஃஹுதுஹு ஸினத்துவ்வலா நவ்ம் லஹு மாபிஃஸ் ஸமாவாதி வமாபில் அர்ழி மன்தல்லதி யஷ்பஃஉ இன்தஹு இல்லா பி இதி(ணு)னிஹி யஃலமு மாபய்ன அய்தீஹிம் வமா

கல்பஹும் வலா யுஹீதூன பிஷய்இம்மின் இல்மிஹீ இல்லா பிமா ஷாஅ வஸிஅ குர்ஸிய்யுஹுஸ் ஸமாவாதி வல்அர்ழ வலா யஊதுஹு ஹிப்லுஹுமா வஹுவல் அலிய்யுல் அழீம்' பொருள் :(உண்மையாக) வணங்கப்படத்தகுதியானவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாரும் இல்லை. அவன் என்றும் உயிருடன் இருப்பவன், நிலைத்திருப்பவன். சிறுதூக்கமோ, உறக்கமோ அவனை ஆட்கொள்ளாது. வானங்களில் உள்ளவையும் பூமியில் உள்ளவையும் அவனுக்கே உரியன. அவனது அனுமதியின்றி அவனிடம் யார்தான் பரிந்துரை செய்யமுடியும்? (படைப்பினங்களான) அவர்களுக்கு முன் உள்ளவற்றையும் அவர்களுக்குப்பின் உள்ளவற்றையும் அவன் நன்கறிவான். அவன் நாடியவற்றைத் தவிர அவன் அறிந்திருப்பவற்றில் எதையும் அவர்களால் அறியமுடியாது. அவனது குர்ஸி வானங்களையும் பூமியையும் வியாபித்திருக்கின்றது. அவையிரண்டையும் பாதுகாப்பது அவனுக்கு சிரமமன்று. அவன் மிக உயர்ந்தவன்;மிக்க மகத்துவமானவன். (4)

மேலும் குல்ஹுவல்லாஹு அஹத் )5( سورة الإخلاص குல்அவூது பிரப்பில் ஃபலக் )6( سورة الفلق குல் அவூது பிரப்பிந்நாஸ் )7( سورة الناس ஆகிய ஸூறாக்களை, கடமையான ஒவ்வொரு தொழுகைக்குப் பின்னர் ஓத வேண்டும். மேலும் இதே மூன்று ஸுறாக்களையும் பகலின் தொடக்கத்தில் ஃபஜ்ர் தொழுகைக்குப் பிறகு மூன்று தடவையும் இரவின் தொடக்கத்தில் – மஃக்ரிப் தொழுகைக்குப் பிறகு மூன்று தடவையும் ஓத வேண்டும். மேலும் ஸூறதுல் பகராவின் பின்வரும் கடைசி இரண்டு வசனங்களை இரவில் ஓத வேண்டும் ஆமனர் ரஸூலு பிமா உன்ஸில இலைஹி மிர் ரப்பிஹி வல்முஃமினூன், குல்லுன் ஆமன பில்லாஹி வ மலாஇகதிஹி வ குதுபிஹி வருஸுலிஹ், லா னுஃபர்ரிகு பைன அஹதி;(ம்) மிர் ருஸுலிஹ், வகாலூ ஸமிஃனா வஅதஃனா குப்ரானக ரப்பனா வ இலைகல் மஸீர் (இத்தூதர், தம் இறைவனிடமிருந்து தமக்கு அருளப்பெற்றதை நமபிக்கைகொண்டுள்ளார்;. (அவ்வாறே) முஃமின்களும் (விசுவாசிக்கின்றனர். இவர்கள்) யாவரும் அல்லாஹ்வையும், அவனுடைய மலக்குகளையும், அவனுடைய வேதங்களையும், அவனுடைய தூதர்களையும் நம்பிக்கைகொண்டுள்ளனர். நாம் இறை தூதர்களில் எவருக்கிடையிலும் வேற்றுமை பாராட்ட மாட்டோம். (என்றும்) இன்னும் நாங்கள் செவியேற்றோம்; (உன் கட்டளைகளுக்கு) கட்டுப்பட்டோம் எங்கள் இரட்சகனே! உன்னிடமே

மன்னிப்புக் கோருகிறோம்; (நாங்கள்) மீளுவதும் உன்னிடமேதான் என்றும் கூறுகிறார்கள் ஸூறாவின் இறுதிவரை ஓதவும்

அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் கூறிய ஸஹீஹான ஹதீஸ் பின்வருமாறு இடம்பெற்றுள்ளது : (யார் ஒருவர் இரவில் ஆயதுல்குர்ஸியை ஓதுகிறாரோ அல்லாஹ்வின் புறத்திலிருந்து ஒரு பாதுகாவளர் அவருக்கு பக்கமாக இருந்து கொண்டிருப்பார் இதனால் காலைவரை அவரிடம் ஷைத்தான் நெருங்கமாட்டான்) மேலும் நபியவர்கள் கூறினார்கள் : (யார் ஓரிரவில் ஸூரா பகராவின் இருதி இரு வசனங்களையும் ஓதுகிறாரோ அதுவே அவரது பாதுகாப்பிற்குப் போதுமாகும்) இந்த ஹதீஸின் கருத்தாவது (அல்லாஹ்வே மிக அறிந்தவன்) எல்லாவிதமான தீங்குகளை விட்டும் அவரைப் பாதுகாக்க இவ்வசனங்களை ஓதுவது ஒருவருக்கு போதுமானதாகும். மேலும் பின் வரும் திக்ரை அதிகமாகப் ஓத வேண்டும்:(அஊது பிகலிமாதில்லாஹித்தாம்மாதி மின் ஷர்ரி மா ஃகலக) பொருள்: அல்லாஹ்வுடைய பரிபூரணமான வார்த்தைகளைக் கொண்டு அவனுடைய படைப்புகளின் தீங்கைவிட்டும் பாதுகாவல் தேடுகிறேன். இதனை இரவு – பகல் நேரங்களிலும் பயணத்தின் போது ஏதாவது இடத்தில் இரவில் தங்க நேரிட்டாலும் அது கட்டிடத்தில் அல்லது பாலைவனத்தில் ஆகாயத்தில் அல்லது கடலில் இருந்தாலும் இந்த திக்ரை ஓதிக்கொள்ள வேண்டும். இது பற்றி நபி ஸல்லல்லாஹூ அலைஹிவஸல்லம் பின்வருமாறு கூறுகிறார்கள் : யாரேனும் (பயணத்தில்) ஓரிடத்தில் இறங்கித் தங்கிவிட்டுப் பின்னர் "அஊது பிகலிமாத்தில் லாஹித் தாம்மாத்தி மின் ஷர்ரி மா கலக்" என்று கூறிப் பிரார்த்தித்தால், அந்த இடத்திலிருந்து அவர் புறப்பட்டுச் செல்லும்வரை எதுவும் அவருக்குத் தீங்கிழைக்காது. மேலும், ஒரு முஸ்லிம் தற்பாதுகாப்பிற்காக காலையிலும் மாலையிலும் ஓத வேண்டிய திக்ருகளில் பின்வரும் திக்ரை மூன்று முறை ஓதிவரவேண்டும் பிஸ்மில்லாஹில்லதீ லா யளுர்ரு மஅஸ்மிஹி ஷைஉன் ஃபில் அர்ழி வலா ஃபிஸ் ஸமாஇ வஹுவஸ் ஸமீஉல் அலீம்) பொருள் : அல்லாஹ்வின் திருப்பெயரைக் கொண்டு (ஆரம்பிக்கிறேன்). அவனுடைய திருப்பெயருடன் பூமியிலும், வானத்திலும் உள்ள எதுவும் எந்த இடையூறும் செய்ய முடியாது. அவன் (அனைத்தையும்) செவியுறுபவன், முற்றும் அறிந்தவன் இவ்வாறு ஓதுமாறு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஆர்வமூட்டிய

ஆதாரப்பூர்மான ஹதீஸ்கள் இடம்பெற்றுள்ளன. மேலும் இவ்வாறு ஓதுவது அனைத்துவிதமான தீங்குகளிலிருந்தும் பாதுகாப்புப் பெறுவதற்கான காரணியாகும் மேற்குறிப்பிட்ட இந்த திக்ர்களும் பாதுகாப்புக் கோரி ஓதும் துஆக்களும் சூனியம் மற்றும் ஏனைய தீங்குகளிருந்தும் பாதுகாக்கும் கேடயமாகும். இவற்றை உண்மையாக தூய மனதுடனும் அல்லாஹ்வின் மீது பூரண நம்பிக்கை வைத்து உறுதியுடனும் தெளிந்த உள்ளத்துடனும் தொடர்ந்து இவற்றை ஓதிவருபவருக்கு இவை நிச்சயம் பயனளிக்கும். மேலும் சூனியம் வைக்கப்பட்டதன் பின் அதனை (முழுமையாக) நீக்குவதற்கான மிகப்பெரும் ஆயுதமாகவும் அவை திகழ்கின்றன. அத்துடன் அதன் இடையூறை அகற்றுமாறும் அதனால் ஏற்படும் ஆபத்தை நீக்குமாறும் அல்லாஹ்விடம் அதிகமதிகம் பணிந்து பிரார்த்தனை செய்யவும் வேண்டும். சூனியத்தின் மூலமும்; அது அல்லாதவைகள் மூலமும் ஏற்படுகின்ற நோய்களுக்கு சிகிச்சை பெற பல துஆக்களை நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் கற்றுத்தந்துள்ளார்கள். அவை ஆதாரபூர்வமான நபிமொழிகளாக பதிவு செய்யப்பட்டுள்ளன. நபியவர்கள் அந்த துஆக்களை நபித்தோழர்களுக்கு ஓதி வைத்தியம் செய்யக் கூடியவர்களாக இருந்தார்கள் அவ்வாறான சில துஆக்களை இங்கே குறிப்பிடுகிறோம். 'அல்லாஹும்ம ரப்பன்;நாஸி அத்ஹிபில் பஃஸ, வஷ்ஃபி அன்தஷ் ஷாஃபி, லா ஷிஃபாஅ இல்லா ஷிஃபாஉக, ஷிஃபாஅன் லா யுஃகாதிரு ஸகமா' பொருள் :((யா அல்லாஹ்! மக்களை இரட்சிப்பவனே! இவரின் துன்பத்தைப் போக்குவாயாக. இவருக்கு ஆரோக்கியத்தை வழங்குவாயாக! நீயே ஆரோக்கியத்தை வழங்குபவனாய் உள்ளாய். உன் ஆரோக்கியததைத் தவிர வேறு ஆரோக்கியம் கிடையாது. வேறு எந்த நோயையும் விட்டு விடாத முழுமையான ஆரோக்கியத்தை வழங்குவாயாக! இந்த துஆவை மூன்று தடவைகள் கூறுதல் வேண்டும். மேலும் ஜிப்ரீல் அவர்கள் நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் நோய் நிவாரணத்திற்காக ஓதிய திக்ரும் இப்பிரார்த்தனைகளுள் ஒன்றாகும். அது பின் வருமாறு: பிஸ்மில்லாஹி அர்கீக மின் குல்லி ஷைய்இன் யுஃதீக வமின் ஷர்ரி குல்லி நப்ஸின் அவ் அய்னின் ஹாஸிதின். அல்லாஹு யஷ்பீக பிஸ்மில்லாஹி அர்கீக' (பொருள் உங்களை நோவினைப்படுத்தும் ஒவ்வொரு பொருளின் தீங்கிலிருந்தும் மற்றும் ஒவ்வோர் ஆத்மாவின் தீங்கில் இருந்தும் அல்லது பொறாமைக்காரனின் கண் திருஷ்டியில்ருந்தும் அல்லாஹ்வின் பெயரைக் கொண்டு உங்களுக்கு நான்

ஓதிப்பார்த்து நோய்நிவாரணம் தேடுகின்றேன். அல்லாஹ் உங்களைக் குணப்படுத்துவானாக! அல்லாஹ்வின் பெயரைக் கொண்டு உங்களுக்கு நான் ஓதிப்பார்த்து நோய்நிவாரணம் தேடுகின்றேன் இதனை மூன்று தடவைகள் கூறவேண்டும் சூனியத்தால் பாதிப்புக்குள்ளான ஒருவர் குடும்பவாழ்க்கையில் ஈடுபடுவதை விட்டும் ஒதுங்கி இருந்தால் அவர் செய்யவேண்டிய சிகிச்சைகளுள் ஒன்றுதான் ஏழு பச்சை இலந்தை இலைகளை எடுத்து அதனை நன்கு அரைத்து ஒரு பாத்திரத்தில் இட்டு குளிப்பதற்குபோதுமான நீரை அதில் ஊற்றி அதிலே ஆயத்துல் குர்ஸி, குல் யாஅய்யுஹல் காபிரூன், (9) குல் ஹுவல்லாஹு அஹத், (10) குல் ஆஊது பிரப்பில் பலக், குல் ஆஊது பிரப்பின்னாஸ் போன்ற ஸூறாக்களுடன் சேர்த்து ஸூறத்து அஃராபில் இடம் பெறும் பின்வரும் சூனியம் பற்றிய வசனங்களையும் ஓதுவார். ((வஅவ்ஹைனா இலா மூஸா அன் அல்கி அஸாக ஃபஇஃதா ஹிய தல்ஃகஃபு மா யஃபிகூன், ஃப வகஅல்ஹக்கு வபதல மா கானூ யஃமலூன், ஃபஃகுலிபூ ஹுனாலிக வன் கலபூ ஸாஃகிரீன்)) (13) பொருள் : (( உமது கைத்தடியை போடும் என மூஸாவுக்கு நாம் வஹி அறிவித்தோம். அவர் அதனைக் கீழே போட்டதும் அது அவர்கள் பாம்பாக கற்பனை செய்தவற்றை விழுங்கிவிட்டது. உண்மை தெளிவாகிவிட்டது! அவர்கள் செய்துகொண்டிருந்தவை வீணாகிவிட்டன.அதனால் அவர்கள் அங்கே தோற்கடிக்கப்பட்டு சிறுமையடைந்தவர்களாகத்திரும்பிச்சென்றார்கள். மேலும்; ஸூறா யூனுஸின் பின்வரும் வசனங்களையும் ஓதுவார் : 'வகால பிஃர்அவ்னு உஃதூனீ பிகுல்லி ஸாஹிரின் அலீம். பஃலம்மா ஜாஅஸ்ஸஹரது கால லஹும் மூஸா அல்கூ மா அன்தும் முல்கூன். பஃலம்மா அல்கூ கால மூஸா மா ஜிஃதும் பிஹிஸ்ஸிஹ்ரு இன்னல்லாஹ ஸயுப்திலுஹூ இன்னல்லாஹ லா யுஸ்லிஹு அமலல் முப்ஸிதீன், வயுஹிக்குல்லாஹுல் ஹக்க பிகலிமாதிஹீ வலவ் கரிஹல் முஜ்ரிமூன்' (14). பொருள் : (79) 'கற்றறிந்த ஒவ்வொரு சூனியக்காரனையும் என்னிடம் கொண்டு வாருங்கள்' என பிர்அவ்ன் கூறினான். (80) சூனியக்காரர்கள் வந்த போது மூஸா, 'நீங்கள் போடுவதைப் போடுங்கள்' என்று அவர்களிடம் கூறினார். (81) அவர்கள் போட்ட போது, 'நீங்கள் கொண்டு வந்தது சூனியமே! நிச்சயமாக அல்லாஹ் அதை அழித்துவிடுவான். நிச்சயமாக அல்லாஹ் குழப்பம் விளைவிப்போரின் செயலைச் சீர்செய்ய மாட்டான்' என்று மூஸா கூறினார். (82) குற்றவாளிகள் வெறுத்த போதும் அல்லாஹ் தன் வார்த்தைகளைக் கொண்டு சத்தியத்தை நிலை நாட்டியே தீருவான் மேலும் ஸூறதுத் தாஹாவின் பின்வரும்

வசனங்களையும் ஓதுவார் : ((காலூ யா மூஸா இம்மா அன் துல்கிய வ இம்மா அன் னகூன அவ்வல மன் அல்கா, கால பல் அல்கூ ஃப இஃதா ஹிபாலுஹும் வ இஸிய்யுஹும் யுகய்யலு இலைஹி மின் ஸிஹ்ரிஹிம் அன்னஹா தஸ்ஆ, ஃப அவ்ஜஸ ஃபீ நஃப்ஸிஹீ ஃகீஃபதம் மூஸா, குல்னா லா தஃகஃப் இன்னக அன்தல் அஃலா, வ அல்கி மா ஃபீ யமீனிக தல்கஃப் மா ஸனஊ, இன்னமா ஸனஊஃகைது ஸாஹிரின், வலா யுஃப்லிஹுஸ் ஸாஹிரு ஹைது அதா). பொருள் : (65) 'மூஸாவே! நீர் போடுகிறீரா? அல்லது போடுபவர்களில் முதலாமவர்களாக நாம் இருக்கட்டுமா?' என்று (சூனியக்காரர்கள்) கேட்டனர் (66) அ(தற்க)வர், 'இல்லை, நீங்கள் போடுங்கள்' என்றார். அப்போது அவர்களது கயிறுகளும், அவர்களது தடிகளும் அவர்களுடைய சூனியத்தின் காரணமாக ஊர்ந்து வருவதைப் போல அவருக்குத் தோற்ற மளித்தன. (67) அப்போது மூஸா தனக்குள் அச்சத்தை உணர்ந்தார். (68) அச்சம் கொள்ளாதீர். நிச்சயமாக நீர்தான் மேலோங்கி நிற்பீர்' என நாம் கூறினோம். (69) உமது வலது கையில் இருப்பதை நீர் போடும். அவர்கள் செய்தவற்றை அது விழுங்கி விடும். அவர்கள் செய்தது சூனியக்காரனின் சூழ்ச்சியேயாகும். சூனியக்காரன் எங்கிருந்து வந்தாலும் வெற்றிபெற மாட்டான்

மேலே குறிப்பிட்ட வசனங்களை தண்ணீரில் ஓதிய பின் மூன்று மிடர்கள் அருந்தி விட்டு எஞ்சிய நீரைக் கொண்டு குளிக்க வேண்டும். இதன்மூலம் அல்லாஹ் நாடினால் நோய் நீங்கி குணம் கிடைக்கும். தேவையேற்படின் இரு விடுத்தமோ அல்லது பல விடுத்தங்களோ நோய் குனமாகும் வரை இவ்வாறு செய்வதில் எவ்விதப்பிரச்சினையும் கிடையாது.

மேலும் சூனியத்திற்கான மிகப்பயனுள்ள சிகிச்சைதான் சூனியம் வைத்த இடத்தைக் கண்டுபிடிப்பதற்கு முயற்சிசெய்தல். அவ்வாறு கண்டுபிடித்து அதனை வெளியே எடுத்து அழித்துவிட்டால் சூனியம் முறிந்து விடும், அதன் பாதிப்பிலிருந்து விடுதலை பெறலாம்.

சூனியத்திலிருந்து தற்காத்து கொள்வதற்கும் அதற்கான சிகிச்சை பெறுவது சம்பந்தமாகவும் குறிப்பிடுவதற்கு முடிந்த வியங்கள் இவைதான். அல்லாஹ் இதற்கான நல்வாய்ப்பினை தருவதற்கு போதுமானவன்.

சூனியக்காரர்களின் செயலின் மூலம் அதாவது பிராணிகளை அறுத்துப் பலியிட்டோ அல்லது வேறு வணக்கங்களை செய்தோ சூனியத்திற்குச் சிகிச்சை

செய்வது கூடாது. ஏனெனில் இவை ஷைத்தானியச் செயல்களாகும். அதுமட்டுமல்லாது அஷ்ஷிர்குல்அக்பர் எனும் பெரிய இணைவைப்புமாகும். இவற்றிலிருந்து விலகி எச்சரிக்கையாக இருப்பது அவசியமாகும். அதே போல் சோதிடர்கள், குறி சொல்பவர்கள், மந்திரவாதிகள் ஆகியோரிடம் விளக்கம் கேட்டு அவர்கள் சொல்கிறபடி செயல்பட்டு சூனியத்திற்கு சிகிச்சை செய்வது கூடாது. ஏனெனில் அவர்கள் ஈமான் எனும் இறைநம்பிக்கை அற்றவர்கள், அத்துடன் அவர்கள் பொய்யர்களாகவும் கெட்டவர்களாகவும் உள்னர். மேலும் அவர்கள் 'இல்முல் ஃகைப்' மறைவான விஷயங்கள் பற்றிய ஞானம் தங்களிடம் இருப்பதாகவும் வாதிடுவதோடு, பொதுமக்களைக் குழப்பத்தில் ஆழ்த்துகிறார்கள்! இத்தகைய நபர்களிடம் சென்று விளக்கம் கேட்பதையும் அதனை நம்புவதையும் நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் தடைசெய்துள்ளார்கள். இதைப் பற்றிய தெளிவான விளக்கம் இந்நூலின் துவக்கத்தில் குறிப்பிடப்பட்டு விட்டது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் மூலம் ஸஹீஹான ஹதீதில் வந்துள்ளதாவது, நபியவர்களிடம் 'நுஷ்ரா' குறித்து கேட்கப்பட்டபோது அதற்கு நபியவர்கள் "அது ஷைத்தானின் செயற்பாடு" என பதிலளித்தார்கள் இந்த ஹதீஸை இமாம்களான அஹ்மதும் அபூதாவூதும் நம்பகமான அறிவிப்பாளர் தொடரின் மூலம் பதிவு செய்துள்ளனர். "நுஷ்ரா" என்பது சூனியத்தினால் பாதிக்கப்பட்டட்டவரின் சூனியத்தை அகற்றுதல் என்பது பொருள். நபியவர்களின் கூற்றின் கருத்து யாதெனில், ஜாஹிலிய்யாக்கால மக்கள் செய்துகொண்டிருந்த சூனியத்தை நீக்கும் செயற்பாடான சூனியக்காரனிடம் சென்று சூனியத்தை நீக்கி விடுமாறு கேட்பது அல்லது குறிப்பிட்ட சூனியத்தை அழிப்பதற்கு இன்னொரு சூனியக்காரனை நாடிச்செல்வது என்பதாகும். (நுஷ்ரா என்பது சூனியத்தினால் பாதிக்கப்பட்டட்டவரின் சூனியத்தை அகற்றுதல் என்பது பொருள். நபியவர்களின் கூற்றின் கருத்து யாதெனில் ஜாஹிலிய்யாக்கால மக்கள் செய்துகொண்டிருந்த சூனியத்தை நீக்கும் செயற்பாடான சூனியக்காரனிடம் சென்று சூனியத்தை நீக்கி விடுமாறு கேட்பது அல்லது இன்னுமொரு சூனியக்காரனிடம் சென்று அது போன்றதொரு சூனியத்தைச்செய்வதன் மூலம் அளிப்பதாகும்.

ஆனால் ஓதிப்பார்ப்பதன் மூலமும் ஷரீஆவில் இடம்பெற்றிருக்கும் பாதுகாப்புக்கோரி ஓதும் பிரார்த்தனைகள் மூலமும் அனுமதிக்கப்பட்ட மருந்துகள்

மூலமும் சிகிச்சை செய்வதில் எவ்விதப்பிரச்சினையும் கிடையாது. அது அனுமதிக்கத்தக்க விடயமாகும். இவ்வழிமுறைகளைப்பின்பற்றி சிகிச்சை செய்யலாமென அறிஞர்களான இப்னுல் கைய்யிம் அவர்களும் பத்ஹுல் மஜீத் நூலின் ஆசிரியரான அஷ்ஷேய்க் அப்துர்ரஹ்மான் இப்னு ஹசன் அவர்களும் ஏனைய அறிஞர்களும் குறிப்பிட்டுள்ளார்கள்.

அனைத்துவிதமான ஆபத்துகளிலிருந்து முஸ்லிம்கள் அனைவரையும் அல்லாஹ் காப்பாற்ற வேண்டுமெனவும் அவர்களது (தீனை) மார்க்கத்தைப் பாதுகாக்கவேண்டுமெனவும், மார்க்கத்தைப் பற்றிய நல்லறிவையும் விளக்கத்தையும் அவர்களுக்கு வழங்கவேண்டுமெனவும், மார்க்கத்திற்கு முரணான எல்லா செயல்களிலிருந்தும் ஈடேற்றம் அளிக்கவேண்டும் எனவும் எல்லாம் வல்ல அல்லாஹ்விடம் இறைஞ்சுகிறோம். அவனே இதற்கு பொறுப்பாளானாக உள்ளான் அல்லாஹ்வின் அடியாரும் திருத்தூதருமான முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் மீதும் அவர்களின் குடும்பத்தார் தோழர்கள் அனைவர் மீதும் ஸலாத்தும் ஸலாமும் உண்டாவதாக

## கணவனுக்கு எதிராக மனைவி சூனியம் செய்தல்

மதிப்புக்குரிய சகோதரருக்கு அப்துல் அஸீஸ் இப்னு அப்தில்லாஹ் இப்னி பாஸ் எழுதிக் கொள்வது, அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மதுல்லாஹி வபரகாதுஹு

உங்களின் திகதியிடப்பட்ட () கடிதம் எனக்குக்கிடைத்தது. அல்லாஹ் உங்களுக்கு அவனின் நேரான பாதையை அடையச்செய்வானாக என்று பிரார்த்தித்தவனாக, உங்களின் கடிதத்தில் நீங்கள் குறிப்பிட்ட விடயம் யாதெனில் உங்களின் புதிய (இரண்டாம்) மனைவியுடன் குடும்பவாழ்வில் ஈடுபடுவதற்கு முற்பட்டபோது உங்களுக்கு ஏற்பட்ட விடயம் குறித்தும் இது குறித்து மார்க்க அறிஞர் ஒருவரிடம் சென்று அவர் உங்களுக்கு வழங்கிய சிகிச்சை குறித்தும், உங்களின் பழைய (முதல்) மனைவிதான் புதிய மனைவியுடன் குடும்ப வாழ்வில் இணைவதற்கு தடையாக செய்வினை செய்து இருந்தாள் என்பதையும்

குறிப்பிட்டிருந்தீர்கள். இது குறித்த மார்க்க தீர்ப்பு என்ன என்று கேட்டிருந்தீர்கள், அதற்கான பதில் பின்வருமாறு :

**பதில்:** முதல் (பழைய) மனைவி இவ்வாறு சூனியம் செய்ததை ஏற்றுக்கொண்டால் அல்லது அதற்கான ஆதாரம் உறுதியானால் அவள் மிகப்பெரும் பாவத்தை செய்துவிட்டாள். அது மாத்திரமல்லாது அவள் குப்ரான வழிகேடான விடயத்தையும் செய்துவிட்டாள். அவளின் இச்செயலானது ஹராமாக்கப்பட்ட சூனியமாகும். சூனியக்காரன் காபிரானவான் என்ற அடிப்படையில் அவள் குப்ரான செயலையே புரிந்துள்ளாள். அல்லாஹ் இது குறித்து பின்வருமாறு குறிப்பிடுகிறான் (யூதர்களான) அவர்கள், சுலைமானின் ஆட்சியில் ஷைத்தான்கள் ஓதியதைப் பின்பற்றினர். சுலைமான் நிராகரிக்க வில்லை. மாறாக, ஷைத்தான்களே நிராகரித்து, மனிதர்களுக்கு சூனியத்தையும், பாபிலோனில் 'ஹாரூத், மாரூத்' என்ற இரு வானவர்கள் மீது இறக்கப்பட்டதையும் கற்றுக்கொடுத்தனர். 'நாம் சோதனையாக இருக்கின்றோம். இதனைக் கற்று நிராகரிப்பாளனாக நீ ஆகிவிடாதே' என்று அவ்விருவரும் கூறாது எவருக்கும் கற்றுக் கொடுத்ததில்லை. அவ்விருவரிடமிருந்தும் கணவன் மனைவிக்கிடையில் பிரிவினையை உண்டு பண்ணக் கூடியதைக் கற்றுக் கொண்டனர். அவர்கள் இதன் மூலம் அல்லாஹ்வின் அனுமதியின்றி ஒருவருக்கும் தீங்கிழைக்கக்கூடியவர்களாக இல்லை. அவர்கள் தங்களுக்கு எவ்விதப் பயனும் அளிக்காத, தங்களுக்குத் தீங்கிழைப்பதையே கற்றுக் கொண்டனர். மாறாக யார் இதை விலைக்கு வாங்குகிறாரோ அவருக்கு மறுமையில் எந்தப் பங்கும் இல்லை என்பதை உறுதியாக அவர்கள் அறிந்து வைத்திருக்கின்றனர். மேலும் அவர்கள் அறிபவர்களாக இருந்தால்,எதற்குப் பகரமாக தங்களையே அவர்கள் விற்றுவிட்டார்களோ அது மிகவும் கெட்டதாகும்.) எனவே, இவ்வசனம் சூனியம் இறை நிராகரிப்புச்செயலாகும், சூனியக்காரன் இறை நிராகரிப்பாளன் என்றும் சூனியக்காரர்கள் தங்களுக்கு கெடுதியைத் தரக்கூடிய எவ்விதப்பயனையும் அளிக்காதவற்றையே கற்றுக் கொள்கிறார்கள் என்றும் இதனை அவர்கள் கற்றுக்கொள்வதன் நோக்கம் கனவன் மனைவிக்கிடையில் பிரிவினையை ஏற்படுத்துவதற்காகும் என்றும் இவர்களுக்கு மறுமைநாளில் எவ்வித விமோசனமும் கிடையாது என்றும் தெளிவாக அறிவிக்கிறது. இது குறித்த ஆதாரபூர்வமான ஸஹீஹான ஹதீஸில் பின்வருமாறு பதிவாகியுள்ளது. நபி

ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் கூறினார்கள் : அழிவை ஏற்படுத்தக் கூடிய ஏழு பெரும்பாவங்களை விட்டும் விலகிக்கொள்ளுங்கள். அப்போது 'அல்லாஹ்வின் தூதரே! அவை எவை?' என்று நபித்தோழர்கள் கேட்டார்கள், அதற்கு நபியவர்கள் 'அல்லாஹ்வுக்கு இணை கற்பிப்பது, சூனியம் செய்வது, உரிய காரணமன்றி அல்லாஹ் தடை விதித்துள்ள உயிரைக் கொல்வது, வட்டியை உண்பது, அநாதைகளின் பணத்தை உண்பது, போரின்போது புறமுதுகிட்டு ஓடுவது, அப்பாவிகளான இறை நம்பிக்கை கொண்ட கற்புள்ள பெண்கள் மீது அவதூறு கூறுவது (அந்தப் பெரும் பாவங்கள்)' என்று பதிலளித்தார்கள்

உமக்கு மருந்தை தந்த அந்தப் பெரியவரும் அந்தப் பெண்ணைப்போன்று ஒரு சூனியக்காரர்தான். ஏனெனில் சூனியத்துடன் தொடர்பான விடயங்களை சூனியக்காரர்கள் தவிர வேறு யாரும் அறியமாட்டார்கள். மேலும் இவர் மறைவானவற்றை அறிந்திருப்பதாக கூறிக்கொள்ளும் மந்திரவாதிகளினதும் குறிசொல்லும் சோதிடர்களிடர்களின் இனத்தைச் சேர்ந்தவருமாக உள்ளார். ஆக ஒரு முஸ்லிம் நபியவர்களின் வழிகாட்டல்களுக்கு அமைய இவ்விடயங்களை விட்டும் நீங்கி எச்சரிக்கையாக இருப்பதுடன், அவர்கள் தாம் மறைவான விடயங்களை அறிந்திருப்பதாக வாதிடும் விடயங்களை நம்பாமல் இருப்பதும் அவசியமாகும். நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் கூறினார்கள் : யார் (சோதிடன்) குறி சொல்பவனிடம் சென்று ஏதேனும் ஒன்றைப் பற்றி விசாரித்தால் அவனுடைய நாற்பது நாட்களின் தொழுகைகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது என நபி ஸல்லல்லாஹூ அலைஹிவஸல்லம் கூறினார்கள். مضت الترجمة இதனை இமாம் முஸ்லிம் அவர்கள் தனது ஸஹீஹில் பதிவு செய்துள்ளார்கள். நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் கூறினார்கள் : யார் ஒருவர் குறி சொல்பவரிடமோ சோதிடனிடமோ சென்று அவர் கூறுவதை நம்பி உண்மைப்படுத்தினால், முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் மீது இறக்கியருளப்பட்டதை நிராகரித்தவராவார் (காபிராகி விடுவார்)

எனவே உங்களைபொறுத்த வரையில் நிகழ்ந்த இந்த விடயத்திற்காக அல்லாஹ்விடம் வருந்தி தவ்பா செய்வது அவசியமாகும். அத்துடன் நீங்கள் குறிப்பிட்ட ஷேய்க், மற்றும் முதல் மனைவி குறித்து அவர்களின் செயற்பாடுகளை தடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நன்மையை

ஏவித்தீமையைத் தடுத்தல் பிரிவின் தலைவர் மற்றும் நீதிமன்ற தலைவர் ஆகியோரிடத்தில் முறையிடுவதோடு, இவ்வாறான விடயங்கள் நிகழும் போது இஸ்லாமிய ஷரீஆவை நன்கறிந்த உலமாக்களிடம் சென்று அதற்கான சரியான சிகிச்சை முறைகளை கேட்டறிந்து கொள்ளவும் வேண்டும். அல்லாஹ் எங்களுக்கும் உங்களுக்கும் மார்க்கத்தில் நல்ல விளக்கத்தை தந்து அதனை உறுதியோடு கடைப்பிடித்து வாழவும் இம்மார்க்கத்திற்கு முரணானவற்றிலிருந்து விலகி நடப்பதற்கும் அருள்புரிவானாக. நிச்சயம் அவன் பெரும் கொடையாளனும் கண்ணியமிக்கவனுமாவான்.

(வஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மதுல்லாஹி வபரகாதுஹு) உங்கள் மீது ஸலாம் உண்டாவதாக, மேலும் அல்லாஹ்வின் அருளும் பரகத்தும் உண்டாவதாக

## சூனியக்காரர்கள் (மந்திரவாதிகள்) வித்தைகாட்டுபவர்களிடம் கேட்டுச்செல்லல்

ரியாதிலிருந்தது ஒரு சகோதரர் பின்வரும் கேள்வியை கேட்டிருக்கிறார். கேள்வி இதுதான், யமனில் சில பகுதிகளில் (அஸ்ஸாதா) அதவது தலைவர்கள் என்ற பெயரால் அழைக்கப்படும் சிலர் உள்ளனர். அவர்கள் தந்திர மந்திரங்கள் அது போன்ற மார்க்கத்திற்கு முரணான விடயங்களை செய்கின்றனர். அவர்களுக்கு தீராத கடுமையான நோய்களையும் தீர்ப்பதற்கு முடியுமெனவும் அதற்கான ஆற்றலும் திறனும் இருப்பதாக வாதிடுகின்றனர். இதற்கு ஆதராரமாக தங்களின் உடலில் கூறிய ஆயுதங்களால் குத்தி காயப்படுத்தியும், நாவை வெட்டியும் காட்டுவதோடு அவற்றை மீண்டும் எவ்விதப் பாதிப்பும் ஏற்படாத வகையில் இருந்த இடத்தில் இணைத்து தங்களுக்கு நோயை குணமாக்கும் ஆற்றல் இருப்பதாக உறுதிப்படுத்துகின்றனர். இவர்களில் சிலர் தொழுகையை நிறைவேற்றுகின்றனர். சிலர் தொழுவதுமில்லை அதே போன்று, அவர்கள் தங்களுக்கு பிறரின் குடும்பத்தில் திருமணம் முடிப்பதை அனுமதிக்கிறார்கள், எனினும் வேறு எவருக்கும் தங்களது குடும்பத்திலிருந்து திருமணம் முடிப்பதை அனுமதிப்பதில்லை. மட்டுமன்றி நோயாளிகளுக்கு சிகிச்சையளிக்கும் வேளையில் நோயாளியைப் பார்த்து, யா அல்லாஹ் ! என்றும் தங்களின் மூதாதையர்களின் ஒருவரின் பெயரைக் கூறி அழைத்தும்

பிரார்த்திக்கின்றனர். ஆரம்ப காலத்தில் மக்கள் அவர்களை மிக கௌரவமாக பார்த்ததுடன் அவர்கள் சாதாரண மனிதர்கள் என்ற நிலையிலில்லா அமானுஷ்ய மனிதர்களாக அவர்களை கருதியதுடன் அல்லாஹ்வுக்கு மிகவும் நெருக்கமானவர்கள் என்றும் நம்பியதுடன், அவர்களை அல்லாஹ்வின் சிரேஷ்ட மனிதர்கள் என்ற பெயராலும் அழைத்தனர். தற்காலத்தில் இவர்களை ஆதரிப்போர் ஆதரிக்காதோர் என மக்களில் இருபிரிவினர் உள்ளனர். அதில் இவர்களை இளைஞர்களும்,கற்றோரும் எதிர்ப்பதோடு, வயது முதிர்ந்தோரும், கல்லாதோரும் இவர்களை ஆதரிக்கின்றனர். கௌரத்திற்குரிய ஷேய்க் அவர்களே! உங்களிடம் இதன் உண்மை நிலை குறித்து தெளிவுபடுத்துமாறு கேட்டுக் கொள்கிறோம். பதில் : இவர்களும் இவர்களைப் போன்ற செயலில் ஈடுபடுவோரும் ஸூபிகளாவர். இவர்களிடம் இஸ்லாத்திற்கு முரணனான கண்டிக்கத்தக்க செயல்கள் இருப்பதோடு, வீணான நடத்தைகளும் காணப்டும். இவர்களும் நபியவர்கள் கூறிய சோதிடர்கள் (குறிசொல்வோர்) என்போரின் பட்டியலில் அடங்குவர். இவர்கள் குறித்து நபியவர்கள் பின்வருமாறு கூறினார்கள்: "யார் (சோதிடன்) குறி சொல்பவனிடம் சென்று ஏதேனும் ஒன்றைப் பற்றி விசாரித்தால் அவனுடைய நாற்பது நாட்களின் தொழுகைகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது" இதற்கான காரணம் யாதெனில், அவர்கள் தங்களுக்கு மறைவான அறிவு இருப்பதாக வாதிடுவதும், ஜின்களுக்கு சேவகம் செய்வதும் அவர்களை வழிபடுவதும், மூஸா அலைஹிஸ்ஸலாம் மற்றும் பிர்அவ்னின் சம்பவத்தில் அல்லாஹ் குறிப்பிடுகின்ற சூனிய வகைகளில் ஒன்றை செய்வதன் மூலம் மக்களை ஏமாற்றி குழப்பத்தில் விட்டுவிடுவதேயாகும். அல்லாஹ் இது குறித்து பின்வருமாறு குறிப்பிடுகிறான் : (நீங்கள் போடுங்கள் என அவர்கள் கூறினர். அவர்கள் போட்ட போது மக்களின் கண்களை மயக்கி அவர்களை அச்சமுறச்செய்தனர். இன்னும் பெரும் சூனியத்தையே கொண்டு வந்தனர்) (19) பின்வரும் ஹதீஸூக்கு அமைய அவர்களிடம் தமது நோய் நிவராணம் தேடி செல்வதோ, அது குறித்து விசாரிப்பதோ கூடாது. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் கூறினர்கள் : "யார் ஒரு சோதிடனிடம் சென்று அவன் சொல்வதை நம்பினால், முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் மீது இறக்கியருளப்பட்டதை நிராகரித்தவனாவான்" இன்னொரு அறிவிப்பில் பின்வருமாறு வந்துள்ளது "யார் ஒருவர் குறி சொல்பவரிடமோ அல்லது சோதிடனிடமோ சென்று அவர் கூறுவதை நம்பி உண்மைப்படுத்தினால்,

முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் மீது இறக்கியருளப்பட்டதை நிராகரித்தவராவான் (காபிராகி விடுவார்)"

அவர்கள் அல்லாஹ் அல்லாதேரிடம் பிரார்திப்பதும், உதவி தேடுவதும் அவர்களின் மூதாதையினர்தான் இப்பிரபஞ்சத்தை அவர்களின் விருப்பப்படி இயக்குகின்றனர் அல்லது அவர்கள்தாம் நோயாளிகளை குணப்படுத்துகின்றனர் அல்லது அவர்கள் மரணித்திருந்தும், திரைமறைவிலிருந்தும் கூட அவர்களின் பிரார்த்தனைகளை ஏற்று பதிலளிக்கின்றனர் என்று நம்புவதைப் பொறுத்தவரை இவை அனைத்தும் அல்லாஹ்வை நிராகரிப்பதுடன் பெரிய இணைவைத்தல்களில் ஒன்றாகவும் கருதப்படுகிறது. இதனால் இம்மந்திரவாதிகளிடம் செல்லாது கண்டிப்பதுடன் அவர்களிடம் கேள்வி கேட்பது அவர்களை நம்புவது போன்றவற்றிலிருந்து விலகி நடப்பது அவசியமாகும்; ஏனெனில் அவர்கள் ஒரே நேரத்தில் குறிசொல்லும் சோதிடர்களின் வேளைகளை செய்வதோடு அல்லாஹ் அல்லாதோரை வணங்வோரும் ஜின்கள் மற்றும் மரணித்தோரிடம் உதவி தேடுவோரான இணைவைப்பாளர்களின் செயல்களை செய்து கொண்டிருக்கினறனர். அது மாத்திரமல்லாது அவர்கள் நம்பிக்கொண்டிருக்கும் முன்னோர்களும் மூதாதையர்களும் இவ்வுலகை கட்டுப்படுத்தும் அதிகாரத்தையும், கராமத்துக்களையும் பெற்றுள்ளனர் என்று நம்பிக்கொண்டிருக்கின்றனர். இவையெல்லாம் தூய இஸ்லாமிய ஷரீஆவில் தடுக்கப்பட்ட ஏமாற்று வித்தைகளும் சோதிடர் மற்றும் மந்திரவாதிகளினதும் செயற்பாடுகளுமாகும்.

கூறிய ஆயுதங்களால் தங்களைத் தாங்களே குத்திக்கொள்வது அல்லது நாக்கை அறுப்பது போன்ற கண்டிக்கத்தக்க நடத்தைகளைப் பொறுத்தவரை, இவை அனைத்தும் மக்களை ஏமாற்றும் ஒரு வித்தையாகும். இவையனைத்தும் ஏலவே குறிப்பிடப்பட்டது போன்று அல்குர்ஆனும் ஸுன்னாவும் தடுத்து எச்சரித்த சூனிய வகைகளுள் ஒன்றாகும். அறிவுள்ள ஒருவர் இதில் ஏமாறுவது கூடாது. இந்த விடயம் பிர்அவ்னின் சூனியக்காரர்கள் பற்றி அல்லாஹ் கூறிய விடயத்துடன் ஒத்திருக்கிறது. அதனை அல்லாஹ் பின்வருமாறு குறிப்பிடுகிறான். "அவர்களின் தடிகளும் அவர்களின் சூனியத்தின் காரணமாக ஊர்ந்து வருவதைப்போல் தோற்றமளித்தன." (20) இவர்கள் ஒரே நேரத்தில் சூனியம் மந்திரம் சோதிடம் குறிசொல்லுதல் போன்வற்றையும் பெரிய இணைவைத்தல்

(அஷ்ஷிர்குல் அக்பர்) அல்லாஹ் அல்லாதோரிடத்தில் உதவி தேடுதல், மறைவான அறிவு இருப்பதாக வாதிடுதல், பிரபஞ்சத்தை நாடியவிதத்தில் செயல்படுத்துதல் போன்ற வற்றை ஒன்றுசேரப்பெற்றுள்ளனர். இவைகள் யாவும் அல்லாஹ் ஹராமாக்கி தடுத்த மிகப்பெரிய ஷிர்க்காகவும் தெளிவான இறைநிராகரிப்பாகவும் மந்திர தந்திர செயல்களாகவும் காணப்படுகின்றன. இது குறித்து அல்லாஹ் பின்வருமாறு குறிப்பிடுகிறான். "வானங்களிலும் பூமியிலும் உள்ள மறைவானவற்றை அல்லாஹ்வைத் தவிர வேறு யாரும் அறியமாட்டார்" என்று நபியே நீங்கள் கூறுவீர்களாக. (21) ஆகவே, அவர்கள் குறித்து அறிந்த அனைத்து முஸ்லிம்களும் அவர்களை கண்டிப்பதுடன் அவர்களின் மோசமான செயல்கள் குறித்து அவை கண்டிக்கத்தக்கது என தெளிவு படுத்துவதும் அவசியமாகும்.

இஸ்லாமிய நாடாக இருந்தால் இஸ்லாமிய ஷரீஆவின் அடிப்படையில் அவர்கள் தண்டிக்கப்படுவதற்கு உரிய அதிகாரிகளிடம் சென்று அவர்களின் இந்த மாய வித்தைகளை முற்றாக ஒழிக்கவும் முஸ்லிம்களை ஏமாற்றும் இந்த பிழையான வழிமுறையிலிருந்து பாதுகாக்க உரிய நடவடிக்கை மேற்கொள்வதும் அவசியமாகும்.

எல்லா விடயங்களிலும் நல்லதை தெரிவு செய்து ஈடேற்றத்தை அடைந்து கொள்ள உதவியாளனாய் அல்லாஹ்வே உள்ளான்

## ஜின்னைப் பயன்படுத்தி நாட்டு வைத்தியம் செய்யும் மருத்துவரிடம் சிகிச்சைப்பெறுவது தொடர்பான மார்க்கத் தீர்ப்பு:

மனிதர்களில் ஒரு பிரிவினர் -அவர்களின் கூற்றின் படி- நாட்டு வைத்தியம் மூலம் சிகிச்சை வழங்குவோர் உள்ளனர். இவ்வாறான ஒருவரிடம் நான் சென்ற போது அவர் என்னிடம் உனது பெயரையும் உனது தாயின் பெயரையும் எழுதித்தருமாறு கேட்டுக்கொண்டார். அதற்கினங்க அவருக்கு எழுதிக்கொடுத்ததும் மறுநாள் அவரை சந்திக்குமாறு கூறினார். மறு நாள் அவரை சந்தித்தபோது, நீ இந்த இந்த நோய்களால் பீடிக்கப்பட்டுள்ளாய். அதற்கான சிகிச்சை இவை இவைதாம் என்று கூறினார். அதுமாத்திரமல்லாது

சிகிச்சையில் அல்குர்ஆனிய வசனங்களை பயன்படுத்துவதாகவும் அவர்களில் ஒருவர் கூறுகிறார். இவர்கள் குறித்த உங்கள் அபிப்பிராயம் யாது? இவர்களிடம் சிகிச்சைக்கென செல்ல முடியுமா? ஸீன்,அய்ன்,ஃகய்ன் ஹாஇல்

**பதில்:** நீங்கள் கூறியது போல் சிகிச்சையின் போது இவ்வாறு யார் செய்கிறார்களோ அதுவே அவர்கள் ஜின்களை இவ்வேளைக்காக பயன்படுத்துவதற்கும், மறைமுகமான அறிவு (இல்முல் கைப்) இருப்பதாக வாதிடுவதற்கும் பெரும் சான்றாக அமைந்துள்ளது. எனவே இது போன்றோரிடம் செல்வதும், கேட்பதும் கூடாதது போல் இவர்களிடம் சிகிச்சை பெறுவதும் கூடாத விடயமாகும். இது பற்றி கூறும் போது நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் பின்வருமாறு குறிப்பிடுகிறார்கள்: "யார் (சோதிடன்) குறி சொல்பவனிடம் சென்று ஏதேனும் ஒன்றைப் பற்றி விசாரித்தால் அவனுடைய நாற்பது இரவுகளின் தொழுகைகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது" இந்த ஹதீதை முஸ்லிம் தனது ஸஹீஹில் பதிவு செய்துள்ளார். மேலும் சோதிடர்கள் குறிசொல்வோர், மந்திரவாதிகள், ஆகியோரிடம் செல்வதும் அவர்களிடம் கேள்வி கேட்பதும் அவர்களை நம்புவதும் தடைசெய்யப்பட்ட விடயம் என்று குறிப்பிடக்கூடிய நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் பல்வேறு நபி மொழிகள் வந்துள்ளன. நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் கூறினார்கள் : (யார் ஒரு சோதிடனிடம் சென்று அவன் சொல்வதை நம்பினால், முஹம்மத் ஸல்லல்லாஹூ அலைஹிவஸல்லம் அவர்களின் மீது இறக்கியருளப்பட்டதை நிராகரித்தவனாவான்) யாரெல்லாம் கூலாங்கற்களை பயண்படுத்துவதன் மூலம் அல்லது தாயத்து கட்டுவதன் மூலம் அல்லது தரையில் கீறுதல் கோடிடுதல் அல்லது நோயாளியிடம் அவரின் பெயரையும் அவரின் தாயின் பெயரையும் அவரின் உறவினர்களின் பெயரையும் கேட்பதன் மூலம் மறைவான அறிவை தங்களுக்கு வாதிடுகிறார்களோ அவை அனைத்தும் அவர்கள் சோதிடர்கள் மற்றும் குறிசொல்லும் மந்திரவாதிகள் என்பதற்கான ஆதாரமாகும். இவர்களிடம் சென்று நோய் குறித்து விசாரிப்பதையும், இவர்கள் கூறுவதை நம்புவதையும் நபியவர்கள் தடுத்துள்ளார்கள்.

எனவே இவர்கள் அல் குர்ஆனின் மூலம் சிகிச்சை செய்கிறார்கள் என கூறிக்கொண்டாலும்,அவர்களிடம் நோய்க்கான சிகிச்சை குறித்து கேட்பதை விட்டும் எச்சரிக்கையாக இருப்பது அவசியமாகும். ஏனெனில்

அசத்தியவாதிகளான இப்பேர்வழிகள் மக்களை ஏமாற்றுவதும் அவர்களின் பலவீனத்தை அறிந்து சுரண்டுவதும் பொதுவான விடயமாகும். ஆதலால் இவர்ளை நம்புவது கூடாது. எனவே முஸ்லிம்களை இவர்களின் தீங்கிலிருந்தும் குழப்பத்திருந்தும் மக்களின் செல்வங்களை முறையற்ற முறையில் சுரண்டி சாப்பிடுவதிலிருந்தும் பாதுகாப்பதற்காக இவ்வாறானோர் பற்றி அறிந்தோர் யாவரும்; இவர்கள் குறித்து ஒவ்வொரு பிரதேசத்திலும் (இஸ்லாமிய நாட்டிலும்) உள்ள அதிகாரமளிக்கப்பட்ட நீதிபதிகள், தலைவர்கள் அல்லது அரச நிறுவனங்களிடம் முறையிட்டு இவர்களின் இந்நடவடிக்கைகளை தடுப்பதற்கான சட்ட நடவடிக்கை மேற்கொள்வதுடன் அல்லாஹ்வின் தீர்ப்பை அமுல் படுத்துவதற்கு முயற்சித்தல் வேண்டும்.

அல்லாஹ்வே இவை நிறைவேற துணைநிற்பவன். தீமையிலிருந்து விலகி நடக்கவும் நன்மை செய்வதற்கு சக்திபெறவும் அவனின் உதவியின்றி முடியாது.

### சூனியத்திற்கான இஸ்லாமிய ஷரீஆ கூறும் சிகிச்சை முறை

**கேள்வி :** யார் தனக்கு சூனியம் செய்யப்பட்டதாக நினைக்கிறாறோ அவர் இலந்தை இலையில் ஏழு இலைகளை எடுத்து அதனை ஒரு தன்னீர் பாத்திரத்தில் இட்டு அதில் முஅவ்விதாத் ஸூறாக்களில் (ஸூறதுல் பலக், ஸூறதுன் நாஸ்) இரண்டையும் ஆயதுல் குர்ஸியையும் குல் யா அய்யுஹல் காபிரூன் ஸூறாவையும் (ஸூறதுல் பகராவின் (வமா உன்ஸில அலல் மலகைனி பிபாபில ஹாரூத வமாரூத) (23) என்ற வசனத்தையும், ஸூறதுல் பாத்திஹாவையும் ஓதி சிகிச்சை செய்யுமாரு ஒரு மார்க்க அறிஞர் சொல்ல கேட்டுள்ளேன். இதன் உண்மை நிலை என்ன? தான் சூனியம் செய்யப்பட்டிருப்பதாக நினைப்பவர் என்ன செய்ய வேண்டும்? இது குறித்த மார்க்க தீர்ப்பை விளக்குமாறு வேண்டுகிறேன்

**பதில் :** சூனியம் உண்டு என்பதில் சந்தேகமில்லை. அவற்றில் சிலது வெறும் கற்பனையே. சூனியம் செய்வோர் குறித்து அல்லாஹ் குறிப்பிட்டிருக்கும் வசனத்தின் அடிப்படையில் அல்லாஹ்வின் நாட்டப்படி சூனியமானது மனிதர்களில் தாக்கத்தை ஏற்படுத்திட முடியும். அல்லாஹ் இது குறித்து

பின்வருமாறு குறிப்பிடுகிறான் : (யூதர்களான) அவர்கள், சுலைமானின் ஆட்சியில் ஷைத்தான்கள் ஓதியதைப் பின்பற்றினர். சுலைமான் நிராகரிக்க வில்லை. (மாறாக, ஷைத்தான்களே நிராகரித்து, மனிதர்களுக்கு சூனியத்தையும், பாபிலோனில் 'ஹாரூத், மாரூத்' என்ற இரு வானவர்கள் மீது இறக்கப்பட்டதையும் கற்றுக்கொடுத்தனர். 'நாம் சோதனையாக இருக்கின்றோம். இதனைக் கற்று) நிராகரிப்பாளனாக நீ ஆகிவிடாதே' என்று அவ்விருவரும் கூறாது எவருக்கும் கற்றுக் கொடுத்ததில்லை) அதாவது : இரு மலக்குகள் அவ்விருவரிடமிருந்தும் கணவன் மனைவிக்கிடையில் பிரிவி னையை உண்டு பண்ணக் கூடியதைக் கற்றுக் கொண்டனர். அவர்கள் இதன் மூலம் அல்லாஹ்வின் அனுமதியின்றி ஒருவருக்கும் தீங்கிழைக்கக்கூடியவர்க ளாக இல்லை. (24) சூனியத்தைப் பொருத்தவரை அதற்கு தாக்கம் உண்டு. என்றாலும் அல்லாஹ்வின் அனுமதியின் பிரகாரம் பிரபஞ்ச நியதியின் அடிப்படையில் இது நிகழ்கிறது. ஏனெனில் இப்பிரபஞ்சத்தில் உள்ளவை யாவும் அல்லாஹ்வின் விதிக்கு உற்பட்டவையே. எனினும் சூனியத்திற்கான சிகிச்சையும் அதற்கான மருந்தும் உண்டு. நபியவர்களுக்கும் இது நிகழ்ந்துள்ளது. அல்லாஹ் அதன் பாதிப்பிலிருந்தும் தீங்கிலிருந்தும் அவர்களைப் பாதுகாத்தான். சூனியம் வைக்கப்பட்ட இடத்தை கண்டுபிடித்து அதனை வெளியே எடுத்து அழித்ததன் மூலம் இச்சோதனையிலிருந்து அவர்களுக்கு நிவாரணத்தை அளித்தான். இவ்வாறே, சூனியக்காரனின் மூலம் முடிச்சிடப்பட்ட நூல்கள், அல்லது ஒன்று சேர்த்து கட்டப்பட்ட ஆணிகள் போன்றவை கண்டுபிடிக்கபட்டால் அதனை முற்றாக அழித்து இல்லாதொழிக்க வேண்டும். காரணம் அவர்கள் அதன் முடிச்சிகளில் ஊதி அவர்களின் தீய நோக்கங்களை அதிலே பிரதிபளிக்கச் செய்கின்றனர். அவை சிலவேளை அல்லாஹ்வின் அனுமதியின் படி நிகழவும், நிகழாமல் இருக்கவும் முடியும். எமது இரட்சகனான அல்லாஹ் எல்லா விடயங்களிலும் வல்லமைப்படைத்தவனாக உள்ளான். இன்னொரு வகையில் சூனியத்தின் பாதிப்புக்குள்ளானவர் மனோ நிலை பாதிக்கப்படாது சுய உணர்வுடன் இருந்தால் அவராகவே தனக்கு ஓதி சிகிச்சை செய்து கொள்வார். இன்னொரு வகையில் பாதிக்கப்பட்டவருக்கு பிறிதொருவர் மூலமாக அவருக்கு ஓதி அவரின் நெஞ்சிலும், அல்லது அவரின் ஏதாவது உறுப்பொன்றின் மீது ஊதுவதன் மூலம் சிகிச்சை செய்ய முடியும். அவ்வாறு ஓதி சிகிச்சை செய்பவர் ஸூறதுல் பாத்திஹா,ஆயதுல் குர்ஸி,குல்ஹுவல்லாஹு அஹத், குல் அஊது

பிரப்பில் பலக், குல் அஊது பிரப்பின்னாஸ் மேலும் ஸூறதுல் அஃ்ராப், ஸூறா யூனுஸ், ஸூறா தாஹாவில் இடம்பெற்றுள்ள சூனியம் தொடர்பான வசனங்களை ஓத வேண்டும். ஸூறதுல் அஃ்ராபின் வசனங்கள் பின்வருமாறு : ((வ அவ்ஹைனா இலா மூஸா அன் அல்கி அஸாக ஃபஇஃதா ஹிய தல்ஃகஃபு மா யஃபிகூன், ஃப வகஅல்ஹக்கு வ பதல மா கானூ யஃமலூன், ஃபஃகுலிபூ ஹுனாலிக வன் கலபூ ஸாஃகிரீன்)) (25). பொருள் : உமது கைத்தடியை போடும் என மூஸாவுக்கு நாம் வஹி அறிவித்தோம். அவர் அதனைக் கீழே போட்டதும் அது அவர்கள் பாம்பாக கற்பனை செய்தவற்றை விழுங்கிவிட்டது. உண்மை தெளிவாகிவிட்டது!அவர்கள் செய்துகொண்டிருந்தவை வீணாகிவிட்டன.அதனால் அவர்கள் அங்கே தோற்கடிக்கப்பட்டு சிறுமையடைந்தவர்களாகத்திரும்பிச்சென்றார்கள். மேலும் ஸுறா யூனுஸின் வசனங்கள் பின்வருமாறு : வகால பிஃர்அவ்னு உஃதூனீ பிகுல்லி ஸாஹிரின் அலீம். பஃலம்மா ஜாஅஸ்ஸஹரது கால லஹும் மூஸா அல்கூ மா அன்தும் முல்கூன். பஃலம்மா அல்கௌ கால மூஸா மா ஜிஃதும் பிஹிஸ்ஸிஹ்ரு இன்னல்லாஹ ஸயுப்திலுஹூ இன்னல்லாஹ லா யுஸ்லிஹு அமலல் முப்ஸிதீன், வயுஹிக்குல்லாஹுல் ஹக்க பிகலிமாதிஹீ வலவ் கரிஹல் முஜ்ரிமூன்' (26). பொருள் : 79. "கற்றறிந்த ஒவ்வொரு சூனியக்காரனையும் என்னிடம் கொண்டு வாருங்கள்' என பிர்அவ்ன் கூறினான். 80. சூனியக்காரர்கள் வந்த போது மூஸா, 'நீங்கள் போடுவதைப் போடுங்கள்' என்று அவர்களிடம் கூறினார். 81.அவர்கள் போட்ட போது, 'நீங்கள் கொண்டு வந்தது சூனியமே! நிச்சயமாக அல்லாஹ் அதை அழித்துவிடுவான். நிச்சய மாக அல்லாஹ் குழப்பம் விளைவிப்போரின் செயலைச் சீர்செய்ய மாட்டான்' என்று மூஸா கூறினார். 82. குற்றவாளிகள் வெறுத்த போதும் அல்லாஹ் தன் வார்த்தைகளைக் கொண்டு சத்தியத்தை நிலை நாட்டியே தீருவான்" ஸூறத்துத் தாஹாவின் வசனங்கள் பின்வருமாறு : (காலூ யா மூஸா இம்மா அன் துல்கிய வ இம்மா அன் னகூன அவ்வல மன் அல்கா, கால பல் அல்கூ ஃப இஃதா ஹிபாலுஹும் வ இஸிய்யுஹும் யுகய்யலு இலைஹி மின் ஸிஹ்ரிஹிம் அன்னஹா தஸ்ஆ, ஃப அவ்ஜஸ ஃபீ நஃப்ஸிஹீ ஃகீஃபதம் மூஸா, குல்னா லா தஃகஃப் இன்னக அன்தல் அஃலா, வ அல்கி மா ஃபீ யமீனிக தல்கஃப் மா ஸனஊ இன்னமா ஸனஊஃ கைது ஸாஹிரின், வலா யுஃப்லிஹுஸ் ஸாஹிரு ஹைது அதா). பொருள் : 65. 'மூஸாவே! நீர் போடுகிறீரா? அல்லது போடுபவர்களில் முதலாமவர்களாக நாம் இருக்கட்டுமா?' என்று (சூனியக்காரர்கள்) கேட்டனர் 66. அ(தற்க)வர், 'இல்லை, நீங்கள் போடுங்கள்'

என்றார். அப்போது அவர்களது கயிறுகளும், அவர்களது தடிகளும் அவர்களுடைய சூனியத்தின் காரணமாக ஊர்ந்து வருவதைப் போல அவருக்குத் தோற்றமளித்தன. 67. அப்போது மூஸா தனக்குள் அச்சத்தை உணர்ந்தார்.68. அச்சம் கொள்ளாதீர். நிச்சயமாக நீர்தான் மேலோங்கி நிற்பீர்' என நாம் கூறினோம். 69, உமது வலது கையில் இருப்பதை நீர் போடும். அவர்கள் செய்தவற்றை அது விழுங்கி விடும். அவர்கள் செய்தது சூனியக்காரனின் சூழ்ச்சியேயாகும். சூனியக் காரன் எங்கிருந்து வந்தாலும் வெற்றிபெற மாட்டான் மேலும், அத்துடன் ஸூறா குல் யா அய்யுஹல் காபிரூன் ஸூறா குல்ஹுவல்லாஹு அஹத் سورة الإخلاص)) குல்அஊது பிரப்பில் ஃபலக் سورة الفلق குல் அஊது பி ரப்பிந்நாஸ் سورة الناس ஆகிய ஸூறாக்களை ஓதுவார். குல்ஹுவல்லாஹு அஹத் ஸூறாவையும், குல்அஊது பிரப்பில் ஃபலக், குல் அஊது பிரப்பிந்நாஸ் ஸூறாக்களை மூன்று தடவைகள் ஓதுவது சிறந்தது. அதன் பின் நிவாரணம் வேண்டி பின்வரும் துஆவை ஓத வேண்டும். 'அல்லாஹும்ம ரப்பன் நாஸி, அத்ஹிபில் பஃஸ, வஷ்ஃபி அன்தஷ் ஷாஃபி, லா ஷிஃபாஅ இல்லா ஷிஃபாஉக, ஷிஃபாஅன் லா யுஃகாதிரு ஸகமா' பொருள் :((யா அல்லாஹ்! மக்களை இரட்சிப்பவனே! இவரின் துன்பத்தைப் போக்குவாயாக. இவருக்கு ஆரோக்கியத்தை வழங்குவாயாக! நீயே ஆரோக்கியத்தை வழங்குபவனாய் உள்ளாய். உன் ஆரோக்கியததைத்; தவிர வேறு ஆரோக்கியம் கிடையாது. இவருக்கு முழுமையான ஆரோக்கியத்தை வழங்குவாயாக!)இந்த துஆவை மூன்று முறை ஓத வேண்டும் அவ்வாறே பின்வரும் துஆவையும் ஓதுவார். (பிஸ்மில்லாஹி அர்கீக மின் குல்லி ஷைய்இன் யுஃதீக, வமின் ஷர்ரி குல்லி நப்ஸின் அவ் அய்னின் ஹாஸிதின், அல்லாஹு யஷ்பீக, பிஸ்மில்லாஹி அர்கீக ) பொருள் : "உங்களை நோவினைப்படுத்தும் ஒவ்வொரு பொருளின் தீங்கிலிருந்தும் மற்றும் ஒவ்வோர் ஆத்மாவின் தீங்கில் இருந்தும் அல்லது பொறாமைக்காரனின் கண் திருஷ்டியிலிருந்தும் அல்லாஹ்வின் பெயரைக் கொண்டு உங்களுக்கு நான் ஓதிப்பார்த்து நோய்நிவாரணம் தேடுகின்றேன். அல்லாஹ் உங்களைக் குணப்படுத்துவானாக! அல்லாஹ்வின் பெயரைக் கொண்டு உங்களுக்கு நான் ஓதிப்பார்த்து நோய்நிவாரணம் தேடுகின்றேன்" மூன்று முறை ஓத வேண்டும். மேலும் "உஊதுக பிகலிமாதில்லாஹித்தாம்மாதி மின் ஷர்ரி மா ஹலக" (பொருள: அல்லாஹ்வுடைய பரிபூரணமான வார்த்தைகளைக் கொண்டு அவனுடைய

படைப்புகளின் தீங்கைவிட்டும் உன்னைப்பாதுகாக்குமாறு அவனிடம் பாதுகாவல் தேடுகிறேன்) என்று கூறுவது சிறந்தது.

இவை யாவும் பயனுள்ள சிகிச்சைகளாகும். இந்த துஆக்களை தண்ணீரில் ஓதி அதன் பின் சூனியத்தினால் பாதிக்கப்பட்டவர் அந்த தண்ணீரை குடித்துவிட்டு, எஞ்சிய நீரால் குளிப்பது அல்லாஹ்வின் உதவியால் நோய்நிவாரணம் பெறுவதற்கான வழிகளில் ஒன்றாக அமைந்து விடும். அதே போன்று ஓதிய அந்த நீரில் இலந்தை மரத்தின் ஏழு பச்சை இலைகளை அரைத்து கலந்து இவ்வாறு செய்வது (அதாவது சிறிதளவை குடித்து எஞ்சிய நீரால் குளிப்பது) நோய் நிவாரணம் பெறுவதற்கான வழியாக அமைந்து விடும். இம் முறையைப் பின்பற்றி அதிகமானோர் சிகிச்சை செய்து பரீட்சித்துள்ளனர். இதன் மூலம் அல்லாஹ் அவர்களுக்கு நல்ல பயனை அளித்துள்ளான். நாமும் அதிகமானவர்களுக்கு இம்முறையில் சிகிச்சை செய்தோம். அல்லாஹ் இதன் மூலம் சுகத்தை கொடுத்தான். இது சூனியத்தினால் பாதிக்கப்பட்டோருக்கு ஒரு அரு மருந்தாகும். அது மட்டுமல்லாது தனது மனைவியோடு குடும்பவாழ்வில் ஈடுபடுவதற்கு தடையாக இருப்பதை உணர்வோர் இந்த ருக்யாவையும் துஆவையும் ஓதும் போது அல்லாஹ்வின் உதவியினால் பயன் கிட்டும். அதாவது இவற்றை ஒருவர் தனக்காக ஓதிக்கொள்வதற்கும் அல்லது ஒருவர் இன்னொருவருக்கு ஓதிப்பார்க்கவும் முடியும் அல்லது இதனை நீரில் ஓதி அதில் சிறிதளவை குடித்துவிட்டு எஞ்சியதால் குளித்துக் கொள்ளவும் முடியும். இவை அனைத்தும் அல்லாஹ்வின் உதவியால் சூனியம் செய்யப்பட்டவருக்கும் மனைவியோடு குடும்ப வாழ்வில் ஈடுபடமுடியாமல் தடைப்பட்டிருப்பவருக்கும் யனளிக்கக்கூடியதாக இருக்கின்றது. இவை சில காரணங்களேயாகும். அல்லாஹ் மாத்திரமே நோய்நிவாரணம் அளிப்பவன். அவன் யாவற்றின் மீது வல்லமை படைத்தவன். அவனின் கையில்தான் பிணியும் மருந்தும் உண்டு. இவ்வுலகில் அனைத்து விவகாரமும் அவனின் விதிப்படியே நிகழ்கிறது. நபிஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் கூறினார்கள்: எந்தவொரு நோயையும் அதற்குரிய நிவாரணி இல்லாமல் அல்லாஹ் இறக்கியதில்லை. அதனை அறிந்தவர் அறிந்து கொண்டார், அறியாதவர் அறியாதிருக்கின்றார்". (76)

இது அல்லாஹ்வின் பேருபகாரமாகும். அவன்தான் நேரான பாதைக்கு வழிகாட்டி வெற்றியைத் தருபவன்.

## மனிதனுக்குள் ஜின் புகுதல் பற்றிய உண்மை விளக்கமும் அதனை மறுப்போறுக்கான பதிலும்:

புகழனைத்தும் அல்லாஹ் ஒருவனுக்கே உரித்தாகட்டும். ஸலாத்தும், ஸலாமும்; அல்லாஹ்வின் தூதர் மீதும் அவர்களின் குடும்பத்தார் மீதும் ,அவர்களின் தோழர்கள் மீதும் அவர்களின் வழிகாட்டள்களைப் பின்பற்றியோர் மீதும் உண்டாவதாக

இவ்வருடம் (1407) ஷஃபான் மாதம் சில உள் நாட்டுப் பத்திரிகைகள், முஸ்லிம் பெண்கள் சிலரைக் குழப்பிக் கொண்டிருந்த சில ஜின்கள் இஸ்லாத்தை தன்னிடம் ஏற்றுக்கொண்டதாக சுருக்கமாகவும் விரிவாகவும் செய்தி வெளியிட்டிருந்தன. இந்த விடயத்தை ரியாதில் வசிக்கும் சகோதரர் அப்துல்லாஹ் இப்னு முஷ்ரிப் அல்உமரி அவர்கள் தெரியப்படுத்தியிருந்தார். அதாவது இவர், ஜின்னினால் பீடிக்கப்பட்ட குறித்த பெண்ணின் மீது ஓதுவதன் மூலம் அந்த ஜின்னுடன் நேரடியாகப் பேசினார். அப்போது அவர் அந்த ஜின்னிடம் இன்னொருவருக்கு அநீதி இழைப்பது ஹராமான தடைசெய்யப்பட்ட செயல் என்றும் அது பெரும்பாவம் என்றும் எடுத்துரைத்தார். மேலும், அந்த ஜின் தான் பௌத்தமதத்தைச் சார்ந்தது என்று கூறிய போது அதற்கு இஸ்லாத்தின் பக்கம் அழைப்பு விடுத்ததோடு குறித்த பெண்ணிலிருந்து வெளியேறிவிடுமாறும் வேண்டினார். உடனே அந்த ஜின் அவ்வழைப்பை திருப்தியுடன் ஏற்றுக்கொண்டு குறித்த பெண்ணிடமிருந்து வெளியேறி மேற்குறிப்பிட்ட நபரான அப்துல்லாஹ் அவர்களிடம் இஸ்லாத்தைத் தழுவிக்கொண்டது. பின்னர் மேற்குறிப்பிடப்பட்ட சகோதரர் அப்துல்லாஹ்வும் அந்தப் பெண்ணின் பொருப்பாளர்களும் குறிப்பிட்ட அந்த ஜின் இஸ்லாத்தை ஏற்றதை அறிந்து கொள்வதற்காக தன்னிடம் (இப்னு பாஸ் (ரஹ்) ) அழைத்து வந்தனர். நான் அந்தப் பெண்ணை வசப்படுத்திய ஜின்னிடம் இஸ்லாத்திற்கு வந்தமைக்கான காரணத்தை விசாரித்தேன். அப்பொழுது அதற்கான காரணங்களை என்னிடம் அது கூறியது. அந்த ஜின் அப்பெண்ணின் மூலமே பேசியது. அது ஒரு ஆணின் குரலாக இருந்தது. அவள் எனக்கு அருகாமையில் அமர்ந்திருந்தாள். அவளின் பக்கத்தில் அவளின் சகோதரியும், சகோதரரும், அப்துல்லாஹவும் இன்னும் சில ஷைக்மார்களும் அமர்ந்திருந்தனர். இதற்கு அவர்களே சாட்சியாளர்களாக இருப்பதோடு ஜின் பேசுவதை அவர்களும் செவிமடுத்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. அந்த ஜின்

இஸ்லாத்தை வெளிப்படையாக ஏற்றுக் கொண்டதுடன் தான் இந்தியா நாட்டைச் சேர்ந்த பௌத மதத்தவன் என்றும் கூறியது, அப்பொழுது நான் அதற்கு அல்லாஹ்வை பயந்து நடந்து கொள்ளுமாறும், இந்தப் பெண்ணிலிருந்து வெளியேறி இவளுக்கு அநியாயம் செய்வதை விட்டும் விலகியிருக்குமாறு அறிவுறுத்தினேன். அதற்கு அந்த ஜின் 'நான் இஸ்லாத்தை முழுமையாக ஏற்றுள்ளேன், எனப் பதிலளித்தது. அதனைத் தொடர்ந்து நான் அந்த ஜின்னிடம் உணக்கு அல்லாஹ் நேர்வழியைக் காட்டியுள்ளான். எனவே தனது சமூகத்தை இஸ்லாத்திற்கு அழைக்குமாறு நான் அறிவுறுத்தினேன், அப்பொழுது தான் அதனை செய்வதாக வாக்களித்து விட்டு அந்தப் பெண்ணை விட்டு வெளியேறியது. மேலும் அது கூறிய கடைசி வார்த்தை இதுதான்: அஸ்ஸலாமு அலைக்கும் (உங்கள் மீது ஸலாம் உண்டாவதாக) அப்போது அந்தப் பெண் தன் வழக்கமான மொழியில் பேசி, ஜின்னினால் அவளுக்கேட்பட்ட சோர்விலிருந்து அவள் நிம்மதியையும் ஆறுதலையும் உணர்ந்ததை என்னால் அறிய முடிந்தது. பின்னர் அவள் சில மாதங்களின் பின் அவளது இரண்டு சகோதரர்கள், மாமா மற்றும் சகோதரியுடன் என்னிடம் மீண்டும் வந்து, தான் நன்றாக இருப்பதாகவும், அந்த ஜின் என்னை மீண்டும் ஆட்கொள்ளவில்லை என்றும் கூறினாள். புகழனைத்தும் அல்லாஹ்வுக்கே!.அந்த ஜின் அப்பெண்ணை ஆட்கொண்டிருக்கும் பொழுது அவள் அனுபவித்த விடயம் பற்றி நான் அவளிடம் விசாரித்தேன். அதற்கு அவள் இஸ்லாமிய கோட்பாடுகளுக்கு முரணான கெட்ட எண்ணங்களின் பாலும்;புத்த மதத்தின் பாலும் அந்த மதம் பற்றிய புத்தகங்களைப் படிப்பதற்கும் ஆர்வம் கொண்டதை உணர்ந்ததாக பதிலளித்தாள். பின்னர், அல்லாஹ் அவளை அந்த ஜின்னிடமிருந்து விடுவித்த பிறகு, அவளிடம் இந்த எண்ணங்கள் தோன்றுவதில்லை, மேலும் அவள் இந்த மாறுபட்ட எண்ணங்களிலிருந்து தனது ஆரம்ப நிலைக்குத் திரும்பி விட்டாள் மதிப்புக்குரிய ஷேக் அலி அல்-தன்தாவி அவர்கள் இது போன்ற நிகழ்வு நடக்க முடியாது என்றும், அது ஏமாற்றும், பொய்யுமாகும் என்றும் கூறியதாகவும் இது ஜின்னினால் வசப்படுத்தப்பட்ட பெண் பேசியதல்ல, வேறு பெண்ணினால் ஒலி நாடாவில் பேசப்பட்டு பதிவுசெய்யப்பட்ட ஒரு விடயம் என்றும் கூறிய தகவல் எனக்கு கிடைத்தது. நான் அவருடைய பேச்சு பதிவு செய்யப்பட்ட ஒலி நாடாவை வேண்டினேன். அதனூடாக அவர் குறிப்பிட்டதை நான் அறிந்து கொண்டேன். நான் ஜின்னினால் ஆட்கொள்ளபப்ட்டவரிடம் நேரடியாக பல கேள்விகளைக்

கேட்டு, அதற்கு அந்த ஜின் பதிலளித்த விடயத்தை ஏற்கனவே பதிவுசெய்யப்பட்ட ஒரு விடயமாக கருதியது எனக்கு மிகவும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியது. இது மிகப்பெறும் தவறுகளில் ஒன்றாகவும் பிழையான கருத்தை அனுமதிப்பது போன்ற ஒரு காரியமுமாகும். மேலும் அவர் (ஷேய்க் தன்தாவி) தனது உரையில் மனிதனின் மூலம் ஜின் இஸ்லாத்தை தழுவுதல் என்பது ஸுலைமான் நபியின் சம்பவத்தில் இடம்பெறும் அல்லாஹ்வின் கூற்றுக்கு முரணானது என்றும் கருதியிருந்தார். அந்த வசனம் பின்வருமாறு : "எனக்குப் பின் ஒருவருக்கும் வழங்காத ஓர் ஆட்சியை எனக்கு வழங்குவாயாக" (29) சந்கேத்திற்கு இடமின்றி இதுவும் அவரின் தவறும் பிழையான புரிதலுமாகும். அல்லாஹ் அவருக்கு நேரான வழியை காட்டுவானாக. அதாவது ஸுலைமான் அலைஹிஸ்ஸாம் அவர்களின் பிரார்த்தனையில் ஜின் மனிதனின் மூலம் இஸ்லாத்தை தழுவிக்கொள்வது என்ற விடயத்திற்கு முரணாண எதுவும் கிடையாது. ஏனெனில் நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களினால் பெருந்தொகையான ஜின்கள் இஸ்லாத்தைத் ஏற்றுள்ளனர்.

இதனை அல்லாஹ் சூரதுல் அஹ்காப் மற்றும் சூரதுல் ஜின் அத்தியாயங்களில் தெளிவுபடுத்தியுள்ளான். நபியவர்களைத்தொட்டும் அபூ ஹுரைரா ரழி அவர்கள் அறிவுக்கும் இது தொடர்பான பின்வரும் ஹதீத் (ஸஹீஹைன்) புஹாரி முஸ்லிமில் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஷைத்தான் எனக்கு காட்சி தந்து என் தொழுகையை முறித்திட முயன்றான். அவனை அல்லாஹ் எனக்கு கட்டுப்படச் செய்தான். நான் அவனைப் பிடித்துக் கொண்டேன். அவனை ஒரு தூணில் கட்டி வைத்து காலையில் நீங்களெல்லாம் பார்க்க வேண்டுமென விரும்பினேன். (எனினும்) எனது சகோதரரான ஸுலைமான் கூறிய பின்வரும் கூற்று என் நினைவுக்கு வந்தது :

"என் இரட்சகனே!! என் குற்றங்களை மன்னித்து விடுவாயாக! எனக்குப் பின் ஒருவருக்கும் வழங்காத ஓர் ஆட்சியை எனக்கு வழங்குவாயாக!"

(அதனால் அவனை விட்டுவிட்டேன்) இழிந்த நிலையில் அவனை அல்லாஹ் துரத்தி விட்டான்)

இது புஹாரியின் வாசகமாகும். முஸ்லிமின் வாசகம் பின்வருமாறு வந்துள்ளது

"ஜின்களில் இப்ரீத் என்னை குறிக்கிட்டு எனது தொழுகையை முறித்திட முயன்றான். அவனை அல்லாஹ் எனக்கு கட்டுப்படச் செய்தான். நான் அவனைப் பிடித்துக் கொண்டேன். அவனை பள்ளிவாயிலின் ஒரு தூணில் கட்டி வைத்து காலையில் நீங்களெல்லாம் பார்க்க வேண்டுமென விரும்பினேன். பின்னர் எனது சகோதரரான ஸுலைமான் கூறிய பின்வரும் கூற்று என் நினைவுக்கு வந்தது :

என் இரட்சகனே!! என் குற்றங்களை மன்னித்து விடுவாயாக! எனக்குப் பின் ஒருவருக்கும் வழங்காத ஓர் ஆட்சியை எனக்கு வழங்குவாயாக)! (31)

(அதனால் அவனை விட்டுவிட்டேன்) இழிந்த நிலையில் அவனை அல்லாஹ் துரத்தி விட்டான்"

புஹாரி இமாமின் நிபந்தனைக்குற்பட்ட ஹதீஸை நஸாஈ இமாம் அவர்கள் ஆயிஷா (ரழி) மூலமாக பதிவு செய்துள்ளார். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் தொழுது கொண்டிருந்த போது ஷைத்தான் வந்தான். உடனே அவனை நபியவர்கள் பிடித்து நிலத்தில் அவனைப்புரட்டி கழுத்தை நெறித்தார்கள். பின்னர் நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் கூறினார்கள் :

அவனின் நாக்கின் ஈரம் (எச்சில்) எனது கையில் பட்டது. ஸுலைமான் நபியின் பிரார்த்தனை இல்லாதிருந்தால் மக்கள் காலையில் பார்க்க வேண்டி அவனைக் கட்டி வைத்திருப்பேன் என்றார்கள்.

இந்த ஹதீஸை அஹ்மதும்; அபூதாவூதும் அபூ ஸஈதின் வாயிலாக பதிவு செய்துள்ளார்கள். அதில்

(எனது கையால் அவனைப் கீழே வீழ்த்தி அவனின் கழுத்தை நெருக்கினேன்; ஆட்காட்டி விரலுக்கும் பெரும் விரலுக்கும் நடுவே அவனது உமிழ்நீரின் குளிர்ச்சியைக் உணர்ந்தேன்) என்று உள்ளது.

அபூ ஹுரைரா ரழி அவர்கள் அறிவிக்கும் பின்வரும் ஹதீதை புஹாரி அவர்கள் தனது ஸஹீஹில் உறுதிப்படுத்தப்பட்ட முஅல்லகாக பதிவு செய்துள்ளார்கள். அது பத்ஹுல் பாரியில் வல்யூம் 4 பக்கம் 487.ல் இடம்பெற்றுள்ளது.

"நபி (ஸல்) அவர்கள் ரமளானுடைய (ஃபித்ரா) ஜகாத்தைப் பாதுகாக்கும் பொறுப்பை என்னிடம் ஒப்படைத்தார்கள். அப்போது ஒருவர் வந்து உணவுப் பொருட்களை அள்ளலானார். அவரை நான் பிடித்து, 'உன்னை நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம அவர்களிடம் கொண்டு செல்லப் போகிறேன்!' என்று கூறினேன். அதற்கவர், 'நான் ஓர் ஏழை!' எனக்குக் குடும்பம் இருக்கிறது. கடும் தேவையும் இருக்கிறது! என்று கூறினார். அவரை நான்விட்டு விட்டேன். விடிந்ததும் நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம அவர்கள், 'அபூ ஹுரைராவே! நேற்றிரவு உம்மால் பிடிக்கப்பட்டவர் என்ன செய்தான்? என்று கேட்டார்கள். நான், 'இறைத்தூதர் அவர்களே! தாம் கடுமையான வறுமையில் இருப்பதாகவும் தமக்குக் குடும்பம் இருப்பதாகவும் அவர் முறையிட்டார். அப்பொழுது, பரிதாபப்பட்டு அவரைவிட்டு விட்டேன்! என்றேன். அதற்கு நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள், 'நிச்சயமாக அவன் பொய் சொல்லியிருக்கிறான்! மீண்டும் அவன் வருவான்! என்று நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம அவர்கள் கூறியதால், அவன் மீண்டும் வருவான் என்று நம்பி அவனைப் பிடிப்பதற்காக காத்திருந்தேன். அவன் வந்து உணவுப் பொருட்களை அள்ளத் தொடங்கியபோது அவனைப் பிடித்தேன். 'உன்னை நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம அவர்களிடம் கொண்டு செல்லப் போகிறேன்! என்று கூறினேன். அதற்கவன், 'என்னைவிட்டுவிடு! நான் ஓர் ஏழை! எனக்குக் குடும்பமிருக்கிறது! மீண்டும் நான் வரமாட்டேன்! என்றான். அவன் மேல் பரிதாபப்பட்டு அவனைவிட்டு விட்டேன். விடிந்ததும் நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம அவர்கள் அபூ ஹுரைராவே! உம்மால் பிடிக்கப்பட்டவன் என்ன செய்தான்! என்று கேட்டார்கள். நான் 'இறைத்தூதர் அவர்களே! அவன் (தனக்குக்) கடும் தேவையும் குடும்பமும் இருப்பதாக முறையிட்டான்; அப்பொழுது, அவன் மீது பரிதாபப்பட்டு அவனைவிட்டுவிட்டேன்! என்று கூறினேன் 'நிச்சயமாக அவன் உம்மிடம் பொய் சொல்லியிருக்கிறான். திரும்பவும் உம்மிடம் வருவான்! என்றார்கள். மூன்றாம் முறை அவனுக்காகக் காத்திருந்தபோது,அவன் வந்து உணவு பொருட்களை அள்ளத் தொடங்கினான். அவனைப் பிடித்து, 'உன்னை நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம அவர்களிடம் கொண்டு செல்லப்போகிறேன்! (ஒவ்வொரு முறையும்) 'மீண்டும் வரமாட்டேன்! என்று செல்லிவிட்டு, மூன்றாம் முறையாக நீ வந்திருக்கிறாய்! என்று கூறினேன். அதற்கவன் 'என்னைவிட்டுவிடு! அல்லாஹ் உமக்குப் பயனளிக்கக் கூடிய சில

வார்த்தைகளைக் கற்றுத் தருகிறேன்!' என்றான். அதற்கு நான் 'அந்த வார்த்தைகள் என்ன? என்று கேட்டேன். 'நீர் படுக்கைக்குச் செல்லும்போது ஆயத்துல் குர்ஸியை ஆரம்பத்திலிருந்து கடைசிவரை ஓதும்! அவ்வாறு செய்தால், விடியும் வரை அல்லாஹ்வின் தரப்பிலிருந்து உம்மைப் பாதுகாக்கிற (வானவர்) ஒருவர் இருந்து கொண்டேயிருப்பார். ஷைத்தானும் உம்மை நெருங்கமாட்டான்!' என்றான். விடிந்ததும் நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம அவர்கள் 'நேற்றிரவு உம்மால் பிடிக்கப்பட்டவன் என்ன செய்தான்? என்று கேட்டார்கள். 'இறைத்தூதர் அவர்களே! அல்லாஹ் எனக்குப் பயனளிக்கக் கூடிய சில வார்த்தைகளைக் கற்றுத் தருவதாக அவன் கூறினான்; அதனால் அவனைவிட்டு விட்டேன்!' என்று கூறினேன். 'அந்த வார்த்தைகள் என்ன? என்று நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம அவர்கள் கேட்டார்கள். 'நீர் படுக்கைக்குச் செல்லும்போது ஆயத்துல் குர்ஸியை ஆரம்பம் முதல் கடைசிவரை ஓதுவீராக! அவ்வாறு ஓதினால், விடியும் வரை அல்லாஹ்வின் தரப்பிலிருந்து உம்மைப் பாதுகாக்கிற (வானவர்) ஒருவர் இருந்துகொண்டேயிருப்பார். ஷைத்தானும் உம்மை நெருங்கமாட்டான்! என்று என்னிடம் அவன் கூறினான்' எனத் தெரிவித்தேன். நபித்தோழர்கள் நன்மையானதைக் கற்றுக் கொண்டு செயல்படுத்துவதில் அதிக ஆர்வமுடையவர்களாக இருந்தார்கள். அப்போது நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம அவர்கள் 'அவன் பெரும் பொய்யனாக இருந்தாலும் உம்மிடம் உண்மையைத்தான் சொல்லியிருக்கிறான். பின்பு, அபூ ஹுரைராவே! மூன்று இரவுகளாக நீர் யாரிடம் பேசி வருகிறீர் என்று உமக்குத் தெரியுமா? என்று வினவினார்கள். 'தெரியாது' என்றேன். 'அவன்தான் ஷைத்தான்!' என்று இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம அவர்கள் கூறினார்கள்.

புஹாரியும் முஸ்லிமும் பதிவு செய்துள்ள ஸபிய்யா (ரழி) அவர்களின் மூலம் அறிவிக்கப்பட்ட ஸஹீஹான ஹதீஸில் இவ்வாறு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் குறிப்பிடுகிறார்கள் : "நிச்சயமாக ஷைத்தான் மனிதனின் இரத்த நாலத்தில் ஓடுகிறான்"

இமாம் அஹ்மத் அவர்களின் முஸ்னதில் பாகம் 4 பக்கம் 216 ல் ஸஹீஹான அறிவிப்பாளர் தொடரின் மூலம் உஸ்மான் இப்னு அபில் ஆஸ் அவர்களின் ஹதீஸை பதிவு செய்துள்ளார்கள். அவர் நபியவர்களிடம்

அல்லாஹ்வின் தூதரே 'நான் தொழும் போது எனக்கும் என் தொழுகைகும் இடையில் ஷைத்தான் வந்து நான் குர்ஆன் ஓதுவதில் பிரச்சனையை உண்டாக்குகிறான்' என்று கூறினார்கள்.

அதற்கு நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் : அவன் ஷைத்தான் ஆவான், அவன் 'கன்ஸப்' எனும் பெயரால் அழைக்கப்படுகிறான் என்று கூறினார்கள். அவன் அவ்வாறு தொழுகையின் இடையூறு செய்வதை நீ உணர்ந்தால் அவனை விட்டும் அல்லாஹ்விடம் பாதுகாப்பு தேடிக்கொள். மேலும், இடது பக்கமாக முகத்தை திருப்பி மூன்று முறை துப்பிக்கொள்' என்று கூறினார்கள். (இதை தொடர்ந்து) 'நான் இந்த முறையை பின்பற்றிய போது அல்லாஹ் என்னை விட்டும் அவனை தூரமாக்கி விட்டான்' என்று கூறினார்

அதே போன்று ஒவ்வொரு மனிதனுடனும் மலக்குகளில் ஒருவரும் ஷைத்தான்களில் ஒருவரும் நபியவர்கள் உட்பட அனைவருக்கும் நியமிக்கப்பட்டுள்ளனர். என்றாலும் அல்லாஹ் நபிவர்களுக்கு உதவி செய்ததனால் அவன் நபியவர்களுக்கு கட்டுப்பட்டுவிட்டான். அதனால் அவன் நல்லதைத் தவிர வேறு எதையும் நபியவர்களுக்கு கட்டளையிடுவதில்லை. இது ஸஹீஹான ஹதீஸ்களில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. ஜின் மனிதனுக்குள் நுழைந்து அவனை குழப்பத்திற்குள் ஆழ்த்தி கட்டுப்படுத்துவற்கு முடியும் என அல்குர்ஆனும் நபியவர்களின் ஸுன்னாவும் அறிஞர்களின் ஏகோபித்த முடிவும் குறிப்பிடும் விடயமாகும். இந்த விடயத்தை அஹ்லுஸ்ஸுன்னாவுக்கு முரணாக நடக்கும் பித்அத்வாதிகளை கண்மூடித்தனமாகப் பின்பற்றி இது தொடர்பாக அறிவோ வழிகாட்டலோ இல்லாது அறிவுபடைத்தவர் என்று கூறிக்கொள்ளும் இவர் எவ்வாறு மறுக்க முடியும்? இக்கடிதத்தை வாசிப்பவரே! உமக்கு இது விடயம் தொடர்பாக முடிந்தளவு இன்ஷா அல்லாஹ் அறிஞர்களின் கூற்றுக்களை குறிப்பிடுகிறேன்

ஸூறதுல் பகராவின் 275 ம் வசனத்திற்கான அல்குர்ஆன் விரிவுரையாளர்களின் வியாக்கியானம் பற்றிய விபரம் : "வட்டியை உண்போர் ஷைத்தானால் தீண்டப்பட்டு பைத்தியம் பிடித்தவன் எழுவது போலன்றி (வேறு விதமாக மறுமையில்) எழும்பமாட்டார்கள்" (33)

அபூ ஜஃபர் இப்னு ஜரீர் அவர்கள் இவ்வசனத்திற்கான விளக்கவுரையில் பின்வருமாறு குறிப்பிடுகிறார் : "வட்டியை உண்போர் ஷைத்தானால் தீண்டப்பட்டு பைத்தியம் பிடித்தவன் எழுவது போலன்றி (வேறு விதமாக மறுமையில்) எழும்பமாட்டார்கள்" (34) இதன் கருத்து யாதெனில் இவ்வுலகில் ஷைத்தான் அவனை (மனிதனை) மயக்கி தீண்டுவதாகும். அவன்தான் (ஷைத்தான்) தீண்டப்பட்டவனின் கழுத்தை நெருக்கி அவனை கீழே தள்ளிவிடுகிறான்

இமாம் அல் பஃகவி அவர்கள் மேற்படி வசனத்திற்கான விளக்கவுரையில் பின்வருமாறு குறிப்பிடுகிறார். அதன் வாசகம் பின்வருமாறு : "ஷைத்தானால் தீண்டப்பட்டு பைத்தியம் பிடித்தவன் எழுவது போலன்றி (வேறு விதமாக மறுமையில்) எழும்பமாட்டார்கள்" (35) இதன் கருத்தாவது, அல்ஜுனூன் பைத்தியம் என்பதாகும். 'மஸ்ஸர் ரஜுலு' என்பதிருந்து பெறப்பட்ட "மம்ஸூஸ்" என்ற வார்த்தையானது ஷைத்தானால் ஆட்கொள்ளப்பட்டு பைத்தியம் பிடித்த ஒருவனுக்கே பயன்படுத்தப்படுவதாக குறிப்பிடுகிறார்.

இப்னு கஸீர் ரஹிமஹுல்லாஹ் அவர்கள் இவ்வசனத்திற்கான விரிவுரையில் பின்வருமாறு குறிப்பிடுகிறார்: "வட்டியை உண்போர் ஷைத்தானால் தீண்டப்பட்டு பைத்தியம் பிடித்தவன் எழுவது போலன்றி (வேறு விதமாக மறுமையில்) எழும்பமாட்டார்கள்" (36) ஷைத்தானால் தீண்டப்பட்டு மயக்கம் ஏற்பட்டவர் மயக்க நிலையில் கீழே விழுந்து எழுவது போல் மறுமை நாளில் மண்ணறைகளிலிருந்து வட்டி சாப்பிட்டோர் எழுவார்கள். அதாவது வட்டி சாப்பிட்டோர் மிக இழிநிலையில் எழுப்பப்படுவர் என்பதே இதன் கருத்தாகும். இப்னு அப்பாஸ் ரழியல்லாஹு அன்ஹு பின்வருமாறு குறிப்பிடுகிறார்கள் "வட்டி உண்பவன் கழுத்து நெறிக்கப்பட்ட நிலையில் பைத்தியம் பிடித்தவனாக மறுமை நாளில் எழுப்பப்படுவான்" இதனை இப்னு அபீ ஹாதிம் அவர்கள் பதிவு செய்துவிட்டு

இதே கருத்தை அவ்ப் இப்னு மாலிக், ஸஈத் இப்னு ஜுபைர், அஸ்ஸுத்திய், அர்ரபீஃ இப்னு அனஸ், கதாதா, முகாதில் இப்னு ஹய்யான் ஆகியோர் அறிவித்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

குர்துபி ரஹிமஹுல்லாஹு அவர்கள் இவ் வசனத்திற்கு விளக்கம் அளிக்கும் போது பின்வருமாறு குறிப்பிடுகிறார் : "வட்டியை உண்போர்

ஷைத்தானால் தீண்டடப்பட்டு பைத்தியம் பிடித்தவன் எழுவது போலன்றி (வேறு விதமாக மறுமையில்) எழும்பமாட்டார்கள்"[1]இவ்வசமானது, ஜின்னின் மூலம் தீண்டப்படுவதை மறுக்கின்றவர்கள், மற்றும் இவ்வாறாக நிகழும் விடயங்கள் இயற்கையின் செயல்கள் என்றும், ஷைத்தான் மனிதனுள் செல்வதில்லை, அவனிடம் இருந்து எந்த தீண்டுதலும் ஏற்படுவதில்லை என்று வாதிடுவோரின் நிலைப்பாடு பிழையானது என்பதற்கான சான்றாக அமைந்துள்ளது. இந்த வசனத்திற்கு மேற்சொன்ன வியாக்கியானத்தை கூறியோர் அதிகமானோர் உள்ளனர். அவற்றை அறிந்து கொள்ள விரும்புவோர் தப்ஸீர் நூல்களை பார்த்துக்கொள்ளமுடியும்.

ஷைஹுல் இஸ்லாம் இப்னு தைமியா ரஹிமஹுல்லாஹ் அவர்கள் தனது புத்தகமான (ஈலாஹுத் தலாலா பீ உமூமிர் ரிஸாலா லித்தகலைன்) என்ற நூலில் மேலே குறிப்பிட்ட கருத்துக்களை குறிப்பிட்டுவிட்டு பின்வருமாறு குறிப்பிடுகிறார். அவரின் கூற்று வருமாறு : (இந்தக் கருத்தை அவரது நூலான பத்வாக்களின் தொகுப்பு என்ற மஜ்மூஉல் பதாவாவில் வல்யூம்19 பக்கம் 9 முதல் 65 வரை காண முடியும்) முஃதஸிலாக்களின் ஒரு பிரிவினரான ஜுப்பாஈ அபூபக்கர் அர்ராஸி போன்றோரும் அவர்கள் அல்லாத பலரும் மயக்கத்தில் இருப்பவனின் உடலில் ஜின் நுழைவதை மறுக்கின்றனர். ஆனால் அவர்கள் ஜின் இருப்பதை மறுக்கவில்லை. ஏனெனில், நபியவர்கள் வாயிலாக ஜின் இருப்பதைப்பற்றி வெளிப்படையாக வந்ததைப்போன்று ஜின் மனித உடலில் நுழைவது பற்றி வரவில்லை என்று அவர்கள் கருதுகிறார்கள், ஆயினும் இக்கருத்து தவறானதாகும். இதனால்தான் இமாம் அல்அஷ்அரி அவர்கள் 'மகாலாத் அஹ்லிஸ்ஸுன்னா வல் ஜமாஆ' என்ற நூலில், மயக்கத்தில் இருப்பவனுள் ஜின் நுழைய முடியும் என்று அஹ்லுஸ்ஸுன்னாக்கள் குறிப்பிடுவதாக பின்வரும் திருக்குர்ஆன் வசனத்தைக் மேற்கோள் காட்டி குறிப்பிடுகிறார் : "வட்டியை உண்போர் ஷைத்தானால் தீண்டடப்பட்டு பைத்தியம் பிடித்தவன் எழுவது போலன்றி (வேறு விதமாக மறுமையில்) எழும்பமாட்டார்கள்" (38) அப்துல்லாஹ் இப்னு அஹ்மத் இப்னி ஹன்பல் அவர்கள், நான் எனது தந்தையிடம் ஒரு கூட்டம் மனித உடலில் ஜின் நுழைய முடியாது என

[1] *ஸூறதுல் பகரா வசனம்* : 275

வாதிடுகின்றனர் என்று கூறவே எனது தந்தை என் அருமை மகனே! அவர்கள் பொய்யுரைக்கின்றனர். அவன்தான் (ஜின்தான்) தனது நாவால் பேசுகிறான் என்றார்கள். இது குறித்த விடயம் அது பற்றிய (தனியான) இடத்தில் விரிவாக பேசப்பட்டுள்ளது. மேலும் இப்னு தைமியா ரஹிமஹுல்லாஹ் தனது பதாவாவில் வல்யூம் 24 பக்கம் 276-277 ல் பின்வருமாறு குறிப்பிடுகிறார். அவரின் கூற்று வருமாறு : ஜின் இருப்பது அல்லாஹ்வின் வேதம், அவனது தூதரின் வழிமுறை, இந்த சமூகத்தின் ஸலபுஸ்ஸாலிஹீன்களான நன்நெறி சார்ந்த முன்னோர்கள் மற்றும் இமாம்கள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அதே போன்று ஜின் மனித உடலில் நுழைவது அஹ்லுஸ்ஸுன்னா இமாம்களினது ஏகோபித்த முடிவாகும். இதற்கு ஆதாரமாக பின்வரும் அல்குர்ஆன் வசனம் அமையப்பெற்றுள்ளது. "வட்டியை உண்போர் ஷைத்தானால் தீண்டப்பட்டு பைத்தியம் பிடித்தவன் எழுவது போலன்றி (வேறு விதமாக மறுமையில்) எழும்பமாட்டார்கள்" (38) ஸஹீஹான கிரந்தத்தில் பதிவுசெய்யப்பட்ட நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் நபி மொழி இதற்கு ஆதாரமாகும். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் கூறினார்கள் : "நிச்சயமாக ஷைத்தான் மனிதனின் இரத்தநாலங்களில் ஓடிக்கொண்டிருக்கிறான்"

இமாம் அஹ்மதுப்னு ஹன்பல் அவர்களின் மகன் அப்துல்லாஹ் அவர்கள் கூறுகிறார்கள் : நான் எனது தந்தையிடம் பல பிரிவினர் "ஜின்னினால் தீண்டப்பட்டு விழுந்த ஒருவனின் உடம்பினுள் ஜின் நுழையமாட்டான் என்று கூறுகின்றனர்" என்று கேட்டதற்கு, அவர்கள் பொய்யுரைக்கின்றனர். அந்த ஜின்தான் அந்த மனிதனின் நாவால் பேசுகிறான் என்று கூறினார். இவர் கூறிய இந்த விடயம் யாவரும் அறிந்ததே! அதாவது மனிதன் ஜின்னின் தீண்டுதலினால் கீழே விழுந்து விடுவான். அப்போது அவன் அர்த்தமற்ற வார்த்தைகளைப் பேசுவான். அவனுக்கு மிகவும் கடுமையாக அடிக்கப்படும், அவ்வாறு ஒட்டகத்திற்கு அடித்தாலும் அதற்கு கடுமையான தாக்கத்தை உண்டு பண்ணும். எனினும் அவனோ எத்தாக்கத்தையும் உணர்வதில்லை. சில வேளை ஜின் தாக்கத்தினால் விழுந்தவனை அவர் அமர்ந்து கொண்டிருக்கும்

விரிப்பில் வைத்து ஒருவர் இழுத்துச் செல்வதும், ஓரிடத்தில் இருந்து இன்னொரு இடத்திற்கு நகர்த்துவதும், பொருட்களை ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்தில் வைப்பது போன்ற விடயங்கள் எதனை அழுத்தமாக

கூறுகிறது என்றால் மனித வாயால் பேசுவதும் அந்த உடலை நகர்த்துவதும் மனிதனல்லாத வேறு இனம் என்பதையே.

இஸ்லாமிய அறிஞர்களில் ஜின் ஆட்கொண்டு மயங்கி விழுந்தவருள் ஜின் நுழைவதை மறுப்போர் எவறுமில்லை. இதனை யார் மறுத்து மார்க்கம் இதனைப் பொய்ப்பிக்கிறது என வாதிடுகிறாரோ அவர் ஷரீஆவின் மீது இட்டுக்கட்டி பொய்யுரைப்பவராவார். இதனை மறுக்கத்தக்க ஷரீஆ ஆதாரம் எதுவும் கிடையாது.

இமாம் இப்னுல் கைய்யிம் ரஹிமஹுல்லாஹ் அவர்கள் தனது "ஸாதுல் மஆத் பீ ஹத்யி கைஃரில் இபாத்" என்ற நூலில் பாகம் 4 பக்கம் 66-69 ல் பின்ருமாறு குறிப்பிடுகிறார். அதாவது "ஸர்உ" (மனிதன் தாக்கப்பட்டு மயக்க நிலையில் கீழே விழுதல்) என்பது இரண்டுவகைப்படும். முதலாவது : பூமியில் இருக்கும் தீய ஆவிகளாலும் (ஜின்களால்) ஏற்படுபவை. இரண்டாவது : ஜன்னி (சளி கெட்டுப்போவதால் ஏற்படும் நோய்) பிடிப்பதால் ஏற்படுபவை. இரண்டாவதைப் பற்றியே மருத்துவர்கள் அதன் காரணம் மற்றும் சிகிச்சை பற்றி பேசுவர்.

ஆவிகளின் தாக்குதலைப் பொறுத்தவரை, அவர்களின் இமாம்களும் புத்திஜீவிகளும் அதை ஒப்புக்கொள்கிறார்கள், அதை அவர்கள் மறுக்கவில்லை, மேலும் அந்த தீய உயிர்கள் நல்ல, உயர்ந்த உயிர்களைச் சந்திப்பதன் மூலம் அதற்கான சிகிச்சையை பெற்றுக் கொள்ள முடியும் என ஒப்புக்கொள்கிறார்கள். இவ்வாறு சந்திப்பதன் விளைவாக அந்த தீய உயிர்களின் செயல்கள் எதிர்க்கப்படுவதோடு அவைகள் முற்றாக இல்லாமல் செய்யப்படுகின்றன. இதை ஹிப்போகிரட்டீஸ் தனது புத்தகங்களில் சிலவற்றில் குறிப்பிட்டுள்ளார், மேலும் அவர் மயங்கி விழுதல் நோய்க்கான சிகிச்சைகள் சிலவற்றைக் குறிப்பிடும் போது, ஜன்னி போன்ற நோயால் பீடிக்கப்பட்ட ஒருவருக்கே இது பயனுடையதாக அமையும்,

ஆ னால் இந்த மருத்துவமானது தீய ஆவிகள் மூலம் ஏற்படும் மயக்க நிலைக்கு பயனுள்ளதாக அமையமாட்டாது என்று குறிப்பிடுகிறார்.

மருத்துவர்களில் அறியாமையில் உள்ளோரும், அவர்களில் அடிமட்ட நிலையில் உள்ளோரும் குப்ரை மறைத்து இஸ்லாத்தை வெளிக்காட்டும் நாத்திக கொள்கையை நல்லொழுக்கம் என்று நம்புவோருமே தீய ஜின்கள் மனிதனை தாக்குவதையும், அவ்வாறு தாக்குதலுக்குள்ளானவரின் உடலில் தாக்கம் செலுத்துவதையும் ஒப்புக்கொள்ள மறுக்கிறார்கள். இது அவர்களின் அறியாமையைத் தவிர வேறு எதுவும் இல்லை. மாறாக, மருத்துவத் துறையில் இதைத் மறுக்கக் கூடிய ஆதாரங்கள் எதுவும் இல்லை. புலனறிவும் நடைமுறையும் இதற்கு தக்க சான்றாக உள்ளன. ஜின் மனித உடலில் சங்கமித்தலை மறுப்பதற்காக அவர்கள் எடுத்து கூறும் விடயமான ஜன்னி பிடித்தல் என்ற விடயமானது அதன் சில பகுதிகளில் உண்மையாக இருப்பினும் அனைத்துப்பகுதிகளிலும் அல்ல. தொடர்ந்தும் அவர் கூறும் போது, நாத்திக வாதம் பேசும் வைத்தியர்கள் ஜன்னி ஏற்படுவதால் மயங்கி கீழே விழுதல் என்ற விடயத்தை மாத்திரம்தான் உறுதிப்படுத்தியுள்ளார்கள். எவருக்கு புத்தியும் இதன் தாக்கங்கள் குறித்தும் அறிவுள்ளதோ அவர்கள் எல்லோரும் இவர்களின் மடமை மற்றும் குறை மதியைக்கண்டு ப்பார்கள். இவ்வகைக்கான சிகிச்சை இரண்டு விடயங்களை அடிப்படையாகக் கொண்டமையாகும்.ஒன்று : ஜின்னின் பாதிப்புக்குட்பட்ட மனிதன் தனக்குத் தானே சிகிச்சை செய்துகொள்ளுதல், இரண்டு : வைத்தியம் செய்யும் ஒருவரின் மூலம் சிகிச்சையைப் பெற்றுக்கொள்ளல். முதாலாவது வகை சிகிச்சைஃ ஜின்னின் பாதிப்புக்கு உட்பட்டவர் தன்னம்பிக்கையுடன் தூய்மையான மனதுடனும் இந்த உயிர்களைப் (ஜின்களைப்) படைத்த அல்லாஹ்வின் பால் முன்னோக்கிச் செல்வதுடன், உள்ளமும் நாவும் ஒரே நிலையில் நின்று பாதுகாப்புக் கோரி ஓதும் ஸஹீஹான துஆக்களை ஓத வேண்டும்' இது ஒரு வகையான போராட்டமாகும். மேலும் இரண்டு விஷயங்களினாலே தவிர, போர்வீரன் தனது எதிரிக்கு முன்னால் தன்னை சமப்படுத்திட முடியாதுஃ அதில் ஒன்று : அவனது ஆயுதம் மிகத்தரம் வாய்ந்ததாக இருக்க வேண்டும். இரண்டு :அதனைப் பயன்படுத்தும் உறுப்புகள் வலுவாகவும் மிகப்பலம் வாய்ந்ததாகவும் இருத்தல் வேண்டும். எதிரியை எதிர் கொள்ளும் போது மேற்குறிப்பிட்ட விடயங்களில் ஒன்று இழக்கப்பட்டால் அவரின் ஆயுதம் அதிக பலனை தரமாட்டாது. இரண்டு விடயங்களும் மொத்தமாக இல்லாமல் போகும் போது அவனின் நிலை எவ்வாறு இருக்கும்!

எவரின் உள்ளத்தில் தவ்ஹீத் (ஏகத்துவம்), தவக்குள் (நம்பிக்கை), தக்வா (இறையச்சம்) அல்லாஹ்வின் பக்கம் முன்னோக்குதல் போன்ற அம்சங்கள் இல்லாது உள்ளம் கெட்டு இருந்தால் அவரை பாதுகாப்பதற்கு எந்த ஆயுதமும் இல்லை.

இரண்டாவது : மருத்துவரின் தரப்பிலிருந்து செய்யப்படும் சிகிச்சை. சிகிச்சையளிப்பவரிடமும் மேற்குறிப்பிடப்பட்ட இரு அம்சங்களும் இருப்பது அவசியமாகும். பாதிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சை செய்யும் பலர் (இவரிலிருந்து வெளியேறி விடு) அல்லது பிஸ்மில்லாஹ் (அல்லாஹ்வின் பெயரால்) அல்லது "லாஹவ்ல வல குவ்வத இல்லா பில்லாஹ்" (அல்லாஹ்வின் நாட்டமும் வல்லமையுமின்றி எதுவொன்றும் அசையவும் முடியாது, எதற்கும் எந்த சக்தியும் கிடையாது) என்ற வார்த்தைகளைக் கூறுவார்கள். ஆனால் நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் "அல்லாஹ்வின் எதிரியே (இவனிலிருந்து) வெளியேறி விடு! நான் அல்லாஹ்வின் தூதராக உள்ளேன்) என்று கூறக்கூடியவர்களாக இருந்தார்கள்"

எங்கள் ஷேய்க் அவர்கள் ஜின் ஆட்கொள்ளப்பட்டு பாதிக்கப்பட்டவருடன் பேசுவதற்காக அந்த ஜின்னோடு பேசக்கூடியவர்களை அனுப்பி வைப்பதைக் கண்டுள்ளேன். அவருடன் கதைப்பவர் அப்பாதிக்கப்பட்டவரை நோக்கி, இம்மனிதரிடமிருந்து வெளியேறிவிடுமாறு ஷேய்க் அவர்கள் உம்மிடம் கூறுமாறு என்னிடம் கூறுனார். இது உமக்கு ஆகுமானதல்ல என்று கூறவே பாதிக்கப்பட்ட அந்நபர் விழித்தெழுந்து அவராகவே பேசுவார். சில வேளை உட்புகுந்த அந்த ஜின் முரண்டுபிடிப்பதாக இருந்தால் அந்த மனிதருக்கு அடிப்பதன் மூலம் வெளியேற்றப்படுவான்; ஆனால் அடிபட்ட அம்மனிதர் மயக்கத்திலிருந்து விழித்தெழுந்தால் எந்த வலியையும் உணரமாட்டார்

பாதிக்கப்பட்ட நபர் மயக்கத்திலிருந்து விழித்து இவ்வாறாக அவரை விட்டு வெளியேறிச்செல்லும் நிகழ்வுகளை பல தடவைகள் நாமும் மற்றவர்களும் நேரடியாக பார்த்துள்ளோம். தொடர்ந்தும் அவர் குறிபிடுகையில், இவ்வாறாக ஜின் பாதிப்புக்குள்ளான ஒருவர் மயக்கத்தில் வீழ்ந்து கிடந்து அவர் சிகிச்சை

பெறுவது பற்றிய நிகழ்வுகளை மறுப்போர் குறைமதியுடயவர்களையும், அறிவிளிளையும் தவிர வேறு யாருமில்லர்.

குறைவான மார்க்கப்பற்றும், இறை நினைவின்றி, நபியவர்கள் தற்காப்புக் கோரிக் கேட்ட பிரார்த்தனைகளை ஓதாது உள்ளங்கள் பாலடைந்து கிடப்பதும்தான் மனிதர்களை தீய உயிர்கள் (ஜின்கள்) ஆட்கொள்வதற்கான காரணமாக அமைந்துள்ளன. இதனால் மேலே சுட்டிக்காட்டியது போன்று, தற்காப்புப் பிராரத்தனைகளை ஓதாது இறைவனை மறந்து வாழும் மனிதனை அது ஆட்கொண்டு தாக்கத்தை ஏற்படுத்துகின்றது.

ஆகவே மேலே குறிப்பிட்ட ஷரீஆ ஆதாரங்களும், அஹ்லுஸ்ஸுன்னா வல் ஜமாஆவைச் சேர்ந்த அறிஞர்களின் ஏகோபித்த முடிவும் ஜின்னானது மனிதனுள் நுழைவதற்கு முடியும் என்பதைத் தெளிவாக எடுத்துக்காட்டுகிறது. வாசகர்களாகிய உங்களுக்கு மேலே குறிப்பிட்ட ஆதாரங்களினூடாக இவ்விடயத்தை மறுப்போர்களின் கூற்று பிழையானது என்பதையும், மதிப்பிற்குறிய ஷேய்க் தன்தாவி அவர்களின் கூற்று தவறானது என்பதையும் தெளிவாக புரிந்து கொள்ள முடிகிறது.

மேலும் ஷேய்க் தன்தாவி அவர்கள் தனது உரையில் உண்மையின் பக்கம் தான் வழிகாட்டப்படும் போது அதன் பால் திரும்பிவிடுவதாக உறுதியளித்திருந்தார். எனவே ஒருவேளை நாம் குறிப்பிட்டதைப் படித்த பிறகு அவர் சத்தியத்திற்குத் திரும்புவார் என நாம் எதிர்பார்க்கிறோம். எமக்கும் அவருக்கும் நேர்வழியையும், அருளையும் தருமாறு அல்லாஹ்வை வேண்டுகிறோம். நாம் குறிப்பிட்டதில் இருந்து தெரிந்து கொள்ளவேண்டிய இன்னொரு விடயம் அந்-நத்வா நாளிதழ் அதன் ஹிஜ்ரி 10/14/1407 அன்று வெளிவந்த இதழில் 8 ம் பக்கத்தில் டாக்டர் முஹம்மது இர்பானினால் எழுதப்பட்ட கட்டுரையில், பைத்தியம் என்ற சொல் மருத்துவ அகராதியில் இருந்து மறைந்துவிட்டதாகவும் மனிதனுக்குள் ஜின் நுழைவதும் அவன் பேசுவதும் அறிவியல் ரீதியாக நூறு சதவிகிதம் தவறானது என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது. இவையனைத்தும் உண்மைக்குப் புறம்பான கருத்துக்களாகும். இக்ருத்துக்கள் யாவும் அஹ்லுஸ்ஸுன்னா வல்ஜமாஆவைச்சேர்ந்த அறிஞர்கள் முடிவுசெய்தவிடயங்கள் மற்றும் ஷரீஆ தொடர்பான விடயங்கள் பற்றிய

அறிவீனத்தின் வெளிப்பாடாகும். மனிதனுக்குள் ஜின் ஆட்கொள்வது சம்பந்தமாக அதிக வைத்தியர்கள் அறியாது இருப்பது அது இல்லை என்பதற்கான ஆதாரமல்ல. மாறாக, இந்த விடயமானது, நேர்மை, நம்பிக்கை மற்றும் மார்க்க விடயங்களிள் அகப்பார்வையும் நுணுக்கமான அறிவையும் பெற்ற அறிஞர்கள் அறிந்திருந்த விடயம் தொடர்பான அவர்களின் பெரும் அறியாமையை இது எடுத்துக் காட்டுகிறது. அது மாத்திரமின்றி மனிதனுள் ஜின் ஆட்கொள்ளுதல் என்பது அஹ்லுஸ்ஸுன்னா வல்ஜமஆத்தினரின் ஏகோபித்த முடிவாகும். இதனை அனைத்து அறிஞர்களைத் தொட்டும் ஷேய்குல் இஸ்லாம் இப்னு தைமியா (ரஹ்) அவர்கள் குறிப்பிட்டுள்ளார். அதே போன்று அபுல் ஹஸன் அல் அஷ்அரி அவர்களும் அஹ்லுஸ்ஸுன்னாக்களைத் தொட்டும் இக்கருத்துக்களை கூறியுள்ளதோடு, ஹிஜ்ரி 799 ல் மரணித்த பேரறிஞர் அபூஅப்தில்லாஹ் முஹம்மதிப்னு அப்தில்லாஹ் அஷ்ஷிப்லி அல் ஹனபி அவர்கள் அபுல் ஹஸன் அல் அஷ்அரி அவர்களின் மூலம் இதனை தனது

'ஆகாமுல் மர்ஜான் பீ ஃகாராஇபில் அக்பாரி வஅஹ்காமில் ஜான்' என்ற அவரின் புத்தகத்தில் 51ம் பாடத்தில் குறிப்பிட்டுள்ளார்

வைத்தியர்களில் துறைபோனவர்கள், புத்திஜீவிகள் அனைவரும் இந்த விடயத்தை மறுக்காது ஏற்றுக்கொண்டேயிருக்கின்றனர் என்பதை இமாம் இப்னு கையிமின் முன்னைய பேச்சில் அறிந்து கொண்டோம். இதனை மருத்துவர்களில் அறியாமையில் உள்ளோரும், அடிமட்ட நிலையில் உள்ளோரும், குப்ரை மறைத்து இஸ்லாத்தை வெளிக்காட்டும் நாத்திக கொள்கையுடையோருமே மறுக்கின்றனர். எனவே வாசகராகிய உமக்கு கூறுவது என்னவென்றால் நாம் கூறிய இந்த உண்மையை தெரிந்து அதனை கடைப்பிடித்தொழுகுவீராக! மேலும் வைத்தியர்களில் குறையறிவுகொண்டோரும் இதுபற்றிய எந்த அறிவோ அகப்பார்வையோ அற்றவர்களின் கூற்றுக்களில் ஏமாந்து விடாதும் இருப்பீராக. இது குறித்து மாற்றுக் கருத்துக் கூறுவோர் அறியாமையில் இருக்கும் வைத்தியர்கள் மற்றும் முஃதஸிலாப்பிரிவைச் சேர்ந்த பித்அத்வாதிகளின் கருத்துக்களை கண்மூடித்தனமாகப் பின்பற்றியே குறிப்பிடுகின்றனர். அல்லாஹ்வே உதவிசெய்யப்போதுமானவன்.

**விழிப்பூட்டல் :**

நாம் குறிப்பிட்ட ஸஹீஹான ஹதீஸ்கள் மற்றும் அறிஞர்களின் கூற்றுக்கள் யாவும்; ஜின்னுடன் நேரடியாக பேசுதல், அதற்கு உபதேசம் செய்தல், அதை இஸ்லாத்தை நோக்கி அழைத்து அது அதற்கான பதிலை கூறியமை போன்ற விடயங்கள் ஸுலைமான் அலைஹி ஸ்ஸலாம் அவர்கள் தொடர்பாக அல்லாஹ் கூறிய பின்வரும் கூற்றுடன் எவ்விதத்திலும் முரணாணதாக இல்லை என்பதை அறிவித்து நிற்கின்றன. அவரின் கூற்றை ஸூறது ஸாதில் அல்லாஹ் பின்வருமாறு கூறிக்காட்டுகிறான். "ஆகவே, அவர் "என் இறைவனே! என் குற்றங்களை மன்னித்து விடு! எனக்குப் பின்னர் எவருமே அடைய முடியாத ஓர் ஆட்சியை எனக்கு நீ தந்தருள் புரிவாயாக! நிச்சயமாக நீதான் பெரும் கொடையாளி" என்று பிரார்த்தனை செய்தார். இவ்வாறுதான் அது (ஜின்னானது) நன்மையை ஏவி தீமையை தடுத்தல் மற்றும் உடலில் ஆட்கொண்டு அது வெளியேறிச் செல்ல மறுத்தல் போன்றவை இந்த வசதனத்திற்கு எவ்விதத்திலும் முரணாக இல்லை. மாறாக அநியாயம் செய்பவனை தடுத்து அநியாயத்திற்கு உட்பட்டவனுக்கு உதவி செய்வதும் நன்மை ஏவி தீமையைப் தடுப்பதும் ஒரு மனிதனுக்கு செய்வது எவ்வாறு அவசியமோ அவ்வாறே ஒரு ஜின்னுக்கும் அவசியமாகும். நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் "நான் ஷைத்தானை அவனின் எச்சில் வடியும் வரையில் இறுக்கமாகப் பிடித்தேன்" என்று கூறுகிறார்கள். இந்த ஹதீஸ் ஏற்கனவே குறிப்பிடப்பட்டுவிட்டது என்பதைக் கவனத்திற்கொள்ளவும். நபியவர்களின் சங்கையான கரத்தில் அவனது எச்சு வடிந்திருப்பதை இதில் கவனிக்க முடிகின்றது. மேலும் நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் கூறினார்கள் : "எனது சகோதரர் ஸுலைமானின் பிரார்த்தனை மாத்திரம் இல்லாதிருந்தால் மக்கள் பார்ப்பதற்காக காலைவரை அவனைக் கட்டிவைத்திருப்பேன்" முஸ்லிமின் இன்னொரு அறிவிப்பில் நபி ஸல்லல்லாஹூ அலைஹிவஸல்லம் கூறியதாக அபுத்தர்தா (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள் : "நிச்சயமாக அல்லாஹ்வின் எதிரியான இப்லீஸ் நெருப்பிலான தீப்பந்தத்தை எனது முகத்தில் வைப்பதற்காக வந்தான். அப்போது "நான் அல்லாஹ்வைக் கொண்டு உன்னிடமிருந்து பாதுகாப்புத் தேடுகிறேன்" என்று மூன்று முறை கூறிவிட்டு பிறகு "அல்லாஹ்வின் முழுமையான சாபத்தைக்கொண்டு உன்னை சபிக்கிறேன்" என்று மூன்று முறை கூறியும் அவன்

பின்வாங்கவில்லை. அப்பொழுது அவனைப் பிடிக்க நாடினேன். எமது சகோதரரான ஸுலைமானின் பிரார்த்தனை மாத்திரம் இல்லாதிருந்தால் மதீனாவில் உள்ள குழந்தைகள் விளையாடுவதற்காக அவனைப் பிடித்து கட்டிவைத்திருப்பேன்" என்றார்கள். இதே கருத்தில் உள்ள ஹதீஸ்கள் அதிகமாகக் காணப்படுகிறன. இவ்வாறுதான் அறிஞர்களின் கருத்தும் அமைந்துள்ளன.

ஜின்னானது மனித உடலினுள் ஆட்கொள்ள முடியும் என்பது தொடர்பாக நாம் குறிப்பிட்ட ஆதாரங்களும் கருத்துகளும் போது மெனக் கருதுகிறேன். சத்தியத்தைத் தேடுவோருக்கும் நாம் குறிப்பிட்ட விடயங்கள் ஏற்றுக்கொள்ளத்தக்கதாக அமைந்திருக்கும் என்றும் நான் நம்புகிறேன். அல்லாஹ்வின் அழகிய திருநாமம் மற்றும் அவனின் உயர் பண்புகளின் மூலம் எமக்கும், முஸ்லிம்கள் அனைவருக்கும் இந்த மார்க்கத்தை விளங்கிக்கொள்ளவும், இம்மார்க்கத்தில் உறுதியாக இருக்கவும் பிராரத்திக்கின்றேன். மேலும் சொல்லிலும் செயலிலும் சரியானதை அடைவதற்கு அருள் புரிய வேண்டியும் பிரார்த்திக்கிறேன். மேலும் எந்த விடயத்திலும் அறிவில்லாது பேசுவதை விட்டும், நாம் அறியாதவற்றை மறுப்பதை விட்டும் எம்மையும் அனைத்து முஸ்லிம்களையும் பாதுகாக்குமாறு பிரார்த்திக்கின்றேன். இதற்கு அவனே பொறுப்பாளனும் வல்லமைமிக்கவனாகவும் உள்ளான்.

ஸலாத்தும் ஸலாமும் எங்கள் நபியும் அல்லாஹ்வின் அடியாரும் தூதருமாகிய முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் மீதும் அவர்களின் குடும்பத்தார் மீதும் அவர்களின் தோழர்கள் மற்றும் அவரை நல்ல முறையில் பின்பற்றி வாழ்தோர் அனைவர் மீதிலும் உண்டாவதாக.

# பொருளடக்கம்

முன்னுரை .......................................................................................... 3
சூனியம், சோதிடம் மற்றும் அவை தொடர்பான சட்டம் ........................................ 6
கணவனுக்கு எதிராக மனைவி சூனியம் செய்தல் ................................................ 18
சூனியக்காரர்கள் (மந்திரவாதிகள்) வித்தைகாட்டுபவர்களிடம் கேட்டுச்செல்லல் ........................................................................................... 21
ஜின்னைப் பயன்படுத்தி நாட்டு வைத்தியம் செய்யும் மருத்துவரிடம் சிகிச்சைப்பெறுவது தொடர்பான மார்க்கத் தீர்ப்பு: ........................................ 24
சூனியத்திற்கான இஸ்லாமிய ஷரீஆ கூறும் சிகிச்சை முறை .............................. 26
மனிதனுக்குள் ஜின் புகுதல் பற்றிய உண்மை விளக்கமும் அதனை மறுப்போறுக்கான பதிலும் :................................................................ 31
விழிப்பூட்டல் : ....................................................................................... 46